|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 15 பராபவ ஸ்ரீ வைகாசி - ஆனி மீ ஜூன் 2026 இதழ் 6



ஸ்ரீ காஞ்சி காமகோடி
பீடத்தின் சார்பில்
வெளியிடுவோர் :
**ஸ்ரீ காமகோடி
கோஸஸ்தானம்**

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

## வைகாசி - ஆனி 2026




மலர் 15 ஜூன் 2026 இதழ் 6


### பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| தெய்வத்தின் குரல்<br>பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 7 |
| நீதிக் கதைகள்<br>பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 10 |
| அனுக்கிரஹ பாஷணம்<br>பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 12 |
| ஸூத ஸம்ஹிதை - தமிழ் விளக்க உரை | 16 |
| அநுகீதாபர்வம் | 19 |
| மெய்ப்பொருள் நாயனார் | 21 |
| ஸ்ரீ அமரநாத மாஹாத்மியம் | 24 |
| ஆனி மாத விசேஷ தினங்கள் | 26 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 27 |
| காஞ்சி மஹிமை | 33 |
| ஆயுர்வேதமும் - ஸுபாஷிதமும் | 36 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 39 |
| வேத ஸூக்தங்கள் | 40 |
| சுக்ர நீதி | 42 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 43 |
| ப்ரபோத சிந்தாமணி | 45 |
| கண்டாகர்ணன் | 46 |
| தட்சிணாமூர்த்தி துதி | 48 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்


# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


**கௌரவ தலைமை ஆசிரியர் :**

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T. N. ராமசந்திரன்

ஸ்ரீ T. S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



**வெளியிடுவோர் :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



**அலுவலக முகவரி :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27222115

**மின் அஞ்சல் :**

kamakotipradeepam@gmail.com



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27222115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु ।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः ।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे ।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हृतो भवेत् ।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

***அவ்யாஜஸுந்தரமனுத்தரமப்ரமேயமபாக்ருதம் பரம மங்கள அங்க்ரிபத்மம் ।***
***சதர்சயேதபி சக்ருத் பவதீ தயார்த்ரா த்ரஷ்டாஸ்மி கேன ததஹம் து விலோசனேன ॥***

*இயற்கை அழகு வாய்ந்ததும், எதற்கும் மேலானதும், அறிவுக்கு எட்டாததும், திவ்யமானதும், பரம மங்களமானதும் ஆன தாமரை போன்ற பாதத்தை தயையினால் இளகிய நீ காண்பிப்பாய் என்றாலும் அதை எந்தக் கண்ணினால் பார்க்கப் போகிறேன்.*

*[அந்த காக்ஷியைக் காண கண்ணையும் கொடுக்க வேண்டும் என்பது தாத்பர்யம்.]*

***ஸன்னாஹிபிர் யா படை: பரிவார்ய மாணே மய்யர்பகே கருணயா ஸ்வயமாபதந்த்யா: ।***
***ஆகர்ணயேயமபி நாம விராமகாலே மாதஸ்தவாங்க்ரிமணி நூபுரஸிஞ்சிதானி ॥***

*தாயே ! ஆராவாரத்துடன் யமபடர்கள் குழந்தையான என்னை சூழப்பட்ட போது தயையால் தானாக ஓடி வருகின்ற உன்னுடைய காலில் அணிந்த ரத்ன சிலம்புகளின் ஒலியை மரிக்கும் தருணத்தில் கேட்பேனா ?*

*[மரண சமயத்தில் என்னை ஆட்கொள்ள வேண்டும் என்பது தாத்பர்யம் ]*

***நீலகண்ட தீக்ஷிதரின் ஆனந்த சாகர ஸ்தவம்***

# ஆசிரியர் பக்கம்

*தற்செயலாக ஒரு யூ ட்யூப் ஒன்றில் ப்ராமணர்கள் பற்றி ஒரு விஷயம் வெளியிடப்பட்டது. தலைப்பு **'ப்ராம்மணர்கள் நல்லவர்களா கெட்டவர்களா?':-** பேட்டி கண்டவர் பல தரப்பட்ட மக்களிடம் [பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள், அன்றாடம் காச்சிகள்] இது பற்றிக் கேட்க அனைவரும் ப்ராம்மணர்கள் மேன் மக்கள் என்றும், எவ்வாறு அவர்கள் அவர்களுக்குப் பண உதவி செய்கிறார்கள், வ்யாபாரம் செய்ய இடம் தருகிறார்கள், பிள்ளைகள் படிக்கவும், வேலையில் அமரவும், சகாயமாக இருக்கிறார்கள் என்று விவரித்தனர்.*

*மகிழ்ச்சிதான், பாராட்டப்பட வேண்டியது தான். அவர்களுக்கு உதவி செய்வது சாதாரண லௌகிக ப்ராம்மணர்களே. ஆசாரம், அனுஷ்டானம் நிறைய இல்லாதவர்கள் தான். ப்ராம்மண பந்து என்னும் அவப் பெயரும் உண்டு. இருப்பினும் மக்கள் பால் காருண்யம் கொண்டவர்கள். சமுதாய நலனைக் கருதுபவர்கள். கேட்க மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருந்தது.*

*உண்மையில் ப்ராம்மணர்கள் தவிர்த்து மற்ற சமூகத்தினர் அனைவரும் இதே போல் உதவி செய்கின்றனர். அது ஏன் ப்ராம்மணர்களுக்குக் குறி வைக்கப்பட்டது? அங்கு தான் உள்ளது இந்த கட்டுரையின் சாரம்.*

*இயற்கையிலேயே ப்ராம்மணர்கள் காருண்யமாக இருந்தாலும், அவர்களுடைய அந்த காருண்யம் புதிதாகப் பார்க்கப்படுகிறது. ப்ராம்மணன் ஏதோ துஷ்டன் போலும், கருணை அற்றவன் போலும் சித்தரிக்கப்படுகிறான். இதற்குக் காரணம் ஒரு தலைவர் ஒரு கட்சியைச் சார்ந்தவர் ப்ராம்மணர்களைப் பற்றி துர் ப்ரசாரம் செய்தது தான்.*

*சுமார் 70 வருடங்கள் ஓயாமல், ஒழியாமல் ப்ராம்மணத் த்வேஷம் கொடி கட்டிப் பறந்தது.'பாப்பானும் பாம்பும் இருந்தால் பாப்பானை அடி பாம்பை*

*அடிக்காதே' என்னும் அளவிற்கு பிராமண த்வேஷம். ஆளும் கட்சியின் துணையோடு குடுமி அறுத்தல், பூணூல் அறுத்தல், இவை அரங்கேறின. வெட்கக் கேடு. நம் ஸனாதன தர்மத்திற்கு ப்ராம்மணத்வம் தான் ஆணி வேர். அதை அகற்றி விட்டால் ஆஸ்திகம் அழிந்து விடும் என்பது அவர்கள் வாதம். இவை எதுவும் எடுபடவில்லை. ப்ராம்மணர்கள் வைதிகமாக இல்லா விட்டாலும் தங்களால் முடிந்த அளவிற்கு அனைத்து மக்களுக்கும் உதவி செய்கின்றனர். மஹாபெரியவா எதிர் பார்த்ததும் இதைத் தான். அது செவ்வனே நடைபெறுகிறது. காழ்ப்புணர்ச்சியினால் ப்ராம்மண சமூகம் அருவருப்பாகப் பார்க்கப்பட்டது. மக்கள் தவறான கண்ணோட்டத்துடன் இருந்தனர். உண்மை நிலவரத்தை இந்த யூ ட்யூப் பேட்டி வெளிச்சம் போட்டுக் காட்டியது. ஒரு சமூகத்தை இழித்தும், பழித்தும் பேசுவது கண்டிக்கக் கூடியது மட்டுமல்ல தண்டிக்கக் கூடியதுமாகும். எந்த தண்டனையும் இதுவரை கொடுக்கப்படவில்லை.*

*இந்த இழிச் செயல்கள் இன்றும் நடந்து கொண்டு இருந்தாலும் இந்த ப்ராம்மணர்கள் உதவி செய்வதை நிறுத்தவில்லை. தொடர்கிறது உதவி என்று பார்க்கும் போது திரு. பீமராவின் ஆசிரியரை நினைக்காமல் இருக்க முடியாது. சாதாரண பீமராவிற்கு பெரும் உதவி செய்து அவரை முன் நிறுத்தியவர் அம்பாவடேகர் என்னும் ப்ராம்மணரே. தர்ம சாஸ்த்ரங்களும் இதையே கூறுகின்றன.*

*'' தூஷிதோபி சரேத்தர்மம் யத்ர யத்ர ஆஸ்ரமே ரத:*
*ஸம: ஸர்வேஷு பூதேஷு ந லிங்கம் தர்ம காரணம்'' மனு 6 - 66*

*மற்றவர்களால் தூஷிக்கப்பட்டாலும் எந்த ஆஸ்ரமத்தில் இருந்தாலும் தர்மத்தைச் செய். அனைத்து உயிர்களையும் ஒன்றாகப் பாவிக்கவும், வெறும் வேஷங்கள் தர்மத்திற்குக் காரணம் ஆகா.*

*இது தெரிந்தோ, தெரியாமலோ ப்ராம்மணர்களின் 'தயை' தொடர்கிறது. பெரியவா சொன்னபடி ப்ராம்மணன் மடி சஞ்சியாக இருந்து கொண்டு*

*மக்களை அலக்ஷியப் படுத்தக் கூடாது. யதா சக்தி அவன் இவன் என்று பாராமல் உதவி செய்ய வேண்டும் என்பதே. யூ ட்யூப் ப்ராம்மணர்களின் உண்மை நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டியது. அதன் விளைவே இக்கட்டுரை. அதற்கு நன்றி என்று கூறி இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற் பாதங்களில் ஸமர்ப்பிக்கிறோம்.*

*ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர !*

**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

# VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

VRNT e.mail :
office@vrnt.org <mailto : office@vrnt.org>
Phone : 044 - 24740549

# தெய்வத்தின் குரல்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## விச்வப்ரேமைக்கு இருப்பிடம்



ஸந்நியாசியின் ஆஹாரத்தில் இரண்டு அம்சங்கள். ஒன்று, அது அவனுக்கு ஸத்வ குணத்தை வளர்த்துக் கொடுக்க வேண்டும் என்பது. இன்னொன்று அந்த ஆஹார வஸ்து ஏதாவது பிற ஜீவனுக்கும் ஹிம்ஸை விளைவிக்காமல் பெறப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது. கோக்ஷீரத்தில் இந்த இரண்டும் பூர்த்தி செய்யப்படுகின்றன. அது ஸத்வத்தைப் புகட்டுவதாக உள்ளது. அதை கோவிடமிருந்து க்ரஹிப்பதில் அந்த கோவுக்கு ஹிம்ஸையும் இல்லை. பகவத் ஸ்ருஷ்டியிலேயே அது விச்வ ப்ரேமைக்கு ஒரு இருப்பிடமாக உண்டாக்கப்பட்டு இருக்கிறது. அதனால் தான் mammal – கள் எனப்படுகிற பாலூட்டி ஜீவ ஜந்துக்களில் கோவுக்கு மட்டுமே தன்னுடைய கன்றுக்குத் தேவைப்படுகிற அளவுக்கு மாத்திரமின்றி, அந்த அளவுக்கு உபரியாக மற்ற மநுஷ்யர்களுக்கும் கொடுப்பதற்கு வசதியாக நிறையப் பால் சுரக்கிறது. ஒரு பசு கொடுக்கக்கூடிய

அவ்வளவு பாலையும், அதன் கன்றே குடித்தால் அந்தக் கன்றுக்கு வயிறு முட்டி வாந்தி வர ஆரம்பித்து விடும். இதிலிருந்து தெரிவது என்ன? நேராகத் தான் ஈன்ற கன்று என்ற ஒன்றை முன்னிட்டே கோ சுரப்பு விட்டாலும் அது நம்மைப் போன்ற மற்ற மநுஷ்யர்களுக்கும் இயற்கையாகவே தாயாயிருந்து போஷாக்குப் பண்ண வேண்டும் என்பதே பகவத் ஸங்கல்பம் என்றுதானே தெரிகிறது? அந்த மாத்ரு ப்ரேமையே கோவுக்கு வேறெந்த ப்ராணிக்கும் இல்லாத உன்னத ஸ்தானத்தைக் கொடுத்து இருக்கிறது. அதை தெய்வமாகவே கருதுவது உன்னதம்.

**பசு தெய்வம் தான்.** ம்ருக ஜாதியாகத் தெரிந்தாலும், மாநுஷமான தாய் போல் பாலைக் கொடுக்கிற கோமாதாவாக இருக்கிற அவள் தெய்வமான ஸ்ரீமாதாவின் ஸ்வரூபமே தான். இஷ்டப்பட்டதை எல்லாம் அளிக்கிற அப்படிப்பட்ட தெய்வத் தாயாக அவள் இருக்கிற போதே காமதேனுவாக விளங்குகிறாள். பசு பால் கொடுக்கும். இந்தக் காமதேனுப் பசுவோ பாற்கடலிலிருந்து உத்பவித்தவள். ஸ்ரீ மாதாவே தான் அப்படி கோமாதாவாக வந்தாள். இதையேதான் 'பஞ்சசதீ'யில் மூக கவி பிராா்த்திக்கிறாா். காமாக்ஷி அம்பாளிடம், ' எங்களுக்குக் காமதேனுவாக நீ இருப்பாய்!' என்று பிராா்த்திக்கிறாா்.

**'காமதுகா பவ கமலே காமகலே காமகோடி காமாக்ஷி '**

'மூக பஞ்சசதீ', ஆர்யா சதகம், ச்லோ. 49

## கோவின் மலமும் பரிசுத்தம் !

எதிரிடையாகத் தோன்றுகிறவையும் பசுவிடத்தில் ஒன்று சேர்கின்றன. ரக்த ஸமானமான அதன் க்ஷீரம் புத்தியைக் கெடுப்பதற்குப் பதில் சுத்தப்படுத்துவதைச் சொன்னேன்; உடம்புக்கு சக்தியைக் கொடுப்பதே உள்ளத்துக்கும் சுத்தி தருவதைச் சொன்னேன். இதை விடவும் எதிரிடையான இன்னொன்று, அதனுடைய கழிவுப் பொருளான கோமயம் என்கிற சாணமும் பரிசுத்தப்படுத்துவது தான். அது உடம்பு, உள்ளம் இரண்டையும் சுத்தி செய்வதாக இருக்கிறது. கழிவுப் பொருளான மலம் தான் பொதுவில் மிகவும் அசுத்தமானதாக இருப்பது; நோய் நொடிகளைப் பரப்புவது; பரம துர்கந்தமாகவும் இருப்பது. அதை உடனேயே தேய்த்து அலம்பி சுத்தம் செய்வோம். ஆனால் கோவின் மலமோ மற்ற மலங்களையும், ஏனைய அசுத்தங்களையும் போக்குவதாக இருக்கிறது; நோய்க் கிருமிகளை அழிப்பதாக இருக்கிறது. அது துர்கந்தமும் வீசுவதில்லை. அதற்குப் பவித்ரமான, ஆரோக்யமான ஒரு தினுஸு மணம் இருக்கிறது.

மற்ற பிராணிகளின் மலம் புனிதத் தன்மையைக் கெடுத்து அசுத்தி செய்வதாக இருக்க, கோமயம் மட்டும் அசுத்தியை நீக்கிப் புனிதம் செய்வதாக இருக்கிறது.

சாப்பிட்ட உச்சிஷ்டம் – எச்சில் என்பது – ஸுகாதாரப் படியும் அசுத்தம்; சாஸ்த்ரப் படியும் மடித் தப்பானது. அதன் அசுசியைப் போக்கிப் புனிதப் படுத்துவது கோமயம். அதனால் தான் எச்சில் இடுவதற்கு கோமயத்தை உபயோகிப்பது. பரம சுத்தத்தை க்ருஹத்துக்கு வரவழைப்பதற்காகவே, ஆரோக்ய லக்ஷ்மியையும், ஸௌமாங்கல்ய லக்ஷ்மியையும் நம் க்ருஹத்தில் குடி கொள்ளப் பண்ணுவதற்காக வாசலில் கோலம் போடும் இடத்தில் சாணம் தெளிப்பதும், வீட்டைச் சாணியால் மெழுகுவதும், இப்போது பேஷனின் பெயரில் இந்தப் பழக்கங்கள் எல்லாம் போய், எங்கே பார்த்தாலும் infection, pollution என்று ஆகியிருக்கிறது.

கோமயம் எவ்வளவு புனிதமாக நினைக்கப்படுகிறது என்பதற்கு அநேகச் சான்றுகள் உண்டு. உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். ஸந்நியாசிக்கு அக்னி ஸம்பந்தம் கூடாது என்ற விதியை ரொம்பவும் கண்டிப்பாகப் பின்பற்றுகிற ஸாதுக்கள் உண்டு. அவர்கள் அக்னி மூட்டிச் சமைத்த ஆஹாரம் எதையும் புஜிக்க மாட்டார்கள். அப்படிப் பட்டவர்களில் ஒரு பிரிவினர் விறகு, கரி மூட்டாமல் முழுக்கவும் பசுஞ்சாணி விரட்டியிலேயே அக்னி மூட்டி அதிலே சமைத்தது என்றால் அப்போது தோஷமில்லை என்று அதை புஜிக்கிற வழக்கத்தைக் கைக் கொண்டு இருக்கிறார்கள். பசுவுக்கு இருக்கப்பட்ட புனிதத் தன்மையால் தான் இப்படி அதன் மலத்துக்குங் கூடப் பெருமை இருக்கிறது.

(தொடரும்)

**பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்**
**மருள் தீர்த்த மாசறு காட்சியவர் - குறள் 199**

மயக்கத்தில் இருந்து தெளிந்த மாசற்ற அறிவை உடையவர் பயன் நீக்கிய சொற்களை மறந்தும் சொல்லமாட்டார். ஆத்மாவை அறிந்து கொள்ளவும். மற்ற சொற்களை விடுக.

முண்டக உபநிஷத் 2-2-5

# நீதிக் கதைகள்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## பக்தியும் பண்பாடும்



நீங்கள் எந்த நாட்டிற்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள். 'Four Faces' நான்முக அமைப்பு உடையவர்கள் தான் பெரும்பாலும் உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழ்கிறார்கள்!

அவர்களைத் தான் - அவர்கள் வாழும் நாட்டின் பெயரால் அழைக்கிறோம். உண்மையில் 'சதுர்முக' அமைப்புடைய அவர்கள் அனைவரும் இந்தியர்கள் தான். அது எப்படி என்பதை நீங்களே ஆராய்ந்து கொள்ளுங்கள்!

### பிஞ்சு நெஞ்சங்களைப் பண்படுத்தும் உழவர்கள்

புலவர்களே ! ஆசிரியர்களே ! நான் இதுவரை சொன்ன கருத்துக்களை எண்ணங்களை, நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

நீங்கள் ஒவ்வொருவரும் ஓர் உழவர். உங்கள் இடத்திலே வரும் மாணவன் களர் நிலம் மாதிரி ! அந்தக் களர் நிலத்தைப் பண்படுத்தி, நல்ல விளை நிலமாகச் செய்ய வேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்தது ! இளஞ் சிறுவர் நெஞ்சங்களில், கல்லூரி மாணவர் உள்ளங்களில் இந்து மதத்தின் பெருமையினைச் சொல்லிப் பதிய வைக்க வேண்டும். வரலாற்றுச் சம்பவங்களை விளக்க வேண்டும் ! பண்பாட்டு நிகழ்ச்சிகளைக் கதைகள் வாயிலாகப் புரிய வைக்க வேண்டும்.

ஒழுக்கத்தின் உயர்வினை விளக்க வேண்டும் ! ஒவ்வொருவரும் கடைப்பிடித்து ஒழுக நீங்கள் தான் துணை புரிய வேண்டும் ! அணியும்

சின்னங்களின் அர்த்தத்தை, அதன் தத்துவத்தை புரிய வைக்க வேண்டும் !

இப்படிப்பட்ட பணிகளை யான் ஒருவன் மட்டும் செய்து விட முடியும் என்று சொல்ல மாட்டேன் ! ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா ? ஆகவே தான் உங்களை அழைத்து, இங்கே ஒன்று கூட்டினேன்.

நீங்கள் மாணவ, மாணவியருக்குச் சமய வகுப்புகள் நடத்தி அதன் மூலமாகவும், இந்து சமய கருத்துக்களைப் பரப்பலாம். சமயம் கிடைக்கும் போதெல்லாம் பாடங்கள் நடத்தும் போது கூட வகுப்பறைகளில் தெரிய வைக்கலாம்! இதற்கு நேரம், காலம், கிழமை தேவையில்லை அல்லவா?

**எங்கும் சொல்வீர் !**

**இந்து மதத்தின் பெருமையை !**

குழந்தைகள் பச்சை மரத்திற்குச் சமமானவர்கள் ! பசுமையான மரத்தில் ஆணி அடித்தால் வேகமாக உள்ளே இறங்கும். அதனால்தான் ஔவை பிராட்டியார் **'இளமையிற் கல்'** என்றார்கள் !

அந்த இளமைப் பருவம் கிடைத்தற்கரிய பருவம் ! அந்தப் பருவத்தில், நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கத்தை 'விதைக்க' வேண்டும் ! உலகத்தோடு ஒட்ட ஒழுகும் பண்பாட்டைப் 'பயிர்' செய்ய வேண்டும்! பக்தி- கடவுள் பற்று, பெரியோர்களுக்குக் கீழ்ப்படிதல் போன்ற 'விளைச்சலை' அறுவடை செய்ய வேண்டும் ! அப்படிச் செய்தால் இந்து மதம் ஏற்றம் பெற வாய்ப்புகள் ஏற்படும். மற்றவரும் புரிந்து கொண்டு நல்வழியில் நடக்கத் துணை புரியும்.

**கொள்கையைப் பரப்பக்**

**கும்பல் தேவையில்லை !**

நம் நாட்டில் ஒரு பழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. நல்ல விஷயம் சொல்கிறார்கள் கேட்கலாம் என்பதற்குக் கூட்டம் சேராது ! நல்ல செயல் செய்யலாம் என்பதற்கும் கூட்டம் சேராது. அப்படி நாம் எடுத்துக் கொண்ட பணிக்கு- தொண்டுக்கு கூட்டம் சேரவில்லையே என்று வருத்தப்படக் கூடாது. கூட்டம் நிறையக் கூடும் என்றும் எதிர்பார்க்கக் கூடாது!


ஏனெனில் பன்றி, பல குட்டிகள் போடும் கொசுக்கள் பல்லாயிரக் கணக்கில் முட்டையிடும் ! இவற்றினால் என்ன பயன்?

சிங்கம் ஒரு குட்டி தான் போடும். யானை ஒரு குட்டி தான் போடும். பசுவும் ஒரு கன்று தானே போடுகிறது ! ஆனால் ஒன்று தானே என்று ஒதுக்கி விடுகிறோமா? இல்லையே ! அந்த ஒரு கன்றாலே, ஒரு குட்டியாலே எத்தனை பெருமை எத்தனை சிறப்பு எத்துணை லாபம்!

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



# அனுக்ரஹபாஷணம்

**Mandana Misra Mandhir in Mahishi, Bihar 29.04.26**

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேஸ்வர: ।
குரூர் ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: ॥

வக்ரதுண்ட மஹாகாய கோடி ஸூர்ய ஸம ப்ரபா ।
நிர்விக்நம் குரு மே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா ॥

ஜய ஜய ஜகதம்ப சிவே ஜய ஜய காமாக்ஷி ஜய ஜயாத்ரிஸுதே ।
ஜய ஜய மஹோதயிதே
ஜய ஜய சித்ககனகௌமுதீதாரே

ஸ்ரீய காந்தாய கல்யாணநிதயே நிதயேர்தினாம் ।
ஸ்ரீ வேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் ।।

ஸ்ருதி ஸ்ம்ருதி புராணாநாம் ஆலயம் கருணாலயம் ।
நமாமி பகவத்பாத பாங்கரம் லோக சங்கரம் ।।

அபாரகருணாஸிந்தும் ஜ்ஞாநதம் சாந்த ரூபிணம் ।
ஸ்ரீ சந்த்ரசேகர குரும் ப்ரணமாமி முதாந்வஹம் நந

தேவே தேஹே ச தேசே ச
பக்தி ஆரோக்ய ஸ்ரீகப்ரதம் ।
புத பாமர சேவ்யந்தம்
ஸ்ரீ ஜயேந்த்ரம் நமாம்யஹம் ।।
ஸதாசிவ ஸமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம் ।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ।।

## பாட்னாவில் நிலம், சஹர்சா மருத்துவமனை

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

- அதற்கு முன்பும் பாட்னாவில் அவர்களின் குருஜி (ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸரஸ்வதி மஹராஜ்). 35-ல் பாட்னா வந்திருந்தார். இப்படியாக பீஹார் மாநிலத்திற்கும், காஞ்சி காமகோடி பீடத்திற்கும் தொடர்பு உள்ளது. அப்போது நாங்கள் பிரதமர் ஜியிடம் பேசும் போது பீகாரையும் குறிப்பிட்டிருந்தோம். அவரும் மகிழ்ச்சியாக இருந்தார். அப்போது அவர் உடனடியாக மாநில அரசாங்கத்திடம், அப்போது முதல்வராக இருந்த **நிதீஷ் குமார்** ஜியிடம் சொல்லி அங்கே பாட்னாவில் நிலத்திற்கான ஏற்பாடு செய்தார். அங்கே இப்போது பூமி பூஜை நடந்துள்ளது. நல்லவைகள் நல்ல வேலைகள் என்றால் அவை சீக்கிரம் நடக்க வேண்டும்.

- அதனால் இங்குள்ள **ஆர். கே. சிங் ஜி** மூலம் சஹர்சாவில் மக்களின் நலனுக்கான திட்டத்திற்காக அவர் காசிக்கு வந்தார். திருப்பதி பாலாஜி ஸ்தலத்தில் நாங்கள் இருந்த போது அவரே அங்கே வந்து விட்டார். குடும்பத்துடன் வந்தார். 'மஹராஜ், நாங்கள் தயார், சீக்கிரம் தொடங்குவதற்கு, கட்டிடம் முதலியவை தயார் என்று. அதனால் பீகார் மக்களுக்காக உங்கள் மனதில் உள்ள சங்கல்பம், விருப்பம், அதில் சேவை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இப்படி எல்லாம் சொன்னார்.

- அதனால் திட்டத்தின் தொடக்கம் அங்கே ஆரம்பித்தது. நேபாள் எல்லை, இங்கிருந்து பாட்னாவிலிருந்து தொடக்கம் ஆகிறது. அதனால் நாளை இங்கே சஹர்சாவில் அதை திறந்து வைக்கும் அந்த சுப ஆரம்பம் உள்ளது. காஞ்சி காமகோடி குரு பரம்பரா மருத்துவமனை அதாவது சங்கரா கண் மருத்துவமனை, நாளை திறந்து வைக்க உள்ளோம். நாங்கள் அங்கே போவதற்கு முன், உள்ளூர் பக்தர்கள் மற்றும் பீகாருக்கான சேவை தற்போது இங்கே நடக்கிறது.

- **சந்த் குமார் சௌத்ரி ஜியும்** அழைக்கப்பட்டிருந்தார். ஆம், அவரும் வந்துவிட்டார். அவர், பல வருடங்களாக நமது குருஜியின் தீவிர பக்தர். அது 20 வருடங்களுக்கு முன் இருக்கும். 29 வருடங்களுக்கு முன் அவருடைய ஊர் முதலியவற்றுக்கு நாங்கள் சென்றிருக்கிறோம். மதுபனி, மதிஹானி, தர்பங்கா இவை எல்லாம் வந்தோம். அங்கே ஜெய்ப்பூரில் அவருடைய மிகப் பெரிய கல்லூரி முதலியவை இருக்கின்றன. மேலும் அப்போது **சதநாராயண் மிஸ்ரா** ஜியும் இருந்தார். அப்போது சாந்த்புராவில் நமது மஹராஜ்ஜின் ஆசீர்வாதத்தால் சங்கரா மருத்துவமனையை நடத்துகிறார்கள்.

- அதனால் அங்கிருந்து **ஸ்ரீ கணேஷ்**, வருகிறார். அந்த முக்கிய நிகழ்ச்சி நாளை நடைபெற உள்ளது. மேலும் அதன் பின் பாட்னாவிலும். அவ்வாறாக பீகார் மக்களுக்கு சேவை செய்வது இதுவே **மகாராஜ்**ஜின் விருப்பம், அவருடைய ஆசீர்வாதம். அதன் தொடக்கம் அங்கிருந்து ஆரம்பிக்கிறது. இப்போது விரிவாக்கம் நடக்கிறது, மேலும் பீகார் மக்களுக்காக, தொடர்ந்து முன்னேற்றம் நடக்கும்.

- ஏனெனில் பீகார் மக்களின் மூலம் அகில பாரதத்தில் வளர்ச்சி நிகழ்ச்சி நடக்கிறது. ஐ.ஏ.எஸ் ஆகிறார்கள், ஐ.பி.எஸ் ஆகிறார்கள், ஐ.ஆர்.எஸ் ஆகிறார்கள், ரயில்வே சர்வீஸில் இருக்கிறார்கள், ஏதோ ஒரு சர்வீஸில் இருக்கிறார்கள். பீகார் மக்களின் மூலம் அகில பாரதத்தில் மக்களின் சேவை நடந்து வருகிறது. இப்போது பீகாருக்கும் சேவை நடப்பது அவசியம். இங்கு மண்டன மிஸ்ர தாம் உள்ளது.

## பௌதிக வளர்ச்சியும் கலாச்சார வளர்ச்சியும்

- வளர்ச்சி இரண்டு வகையில் நடக்க முடியும். ஒன்று பௌதிக வளர்ச்சி. பள்ளி, மருத்துவமனை, சாலை, மின்சாரம், மருந்து முதலியவை, பாலம் கட்டுதல் இவை எல்லாம் நடக்கும். நாங்கள் ஆச்சரியத்துடன் பார்த்தோம், பெரிய பெரிய பாலம் கட்டியிருந்தார்கள், அது தர்பங்காவிலிருந்து வரும் போதே. அதனால் ஒன்று பௌதிக வளர்ச்சி, இரண்டாவது கலாசார வளர்ச்சி.

- இன்றும் நமது ஸனாதன வைதிக ஹிந்து தர்மத்தை அனுஷ்டிப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் பீகாரில் உள்ளது. பீகாரில் சொல்லக் கூடியவர் யாரோ இருக்கிறார். இன்றும் திலகதாரணம் ஆகட்டும், சிகை ஆகட்டும், உடை அணிதல் ஆகட்டும். இங்குள்ள பாக் ஆகட்டும், எதுவாக இருந்தாலும் சனாதன வைதிக ஹிந்து தர்மத்தின் நம்பிக்கை விஷயம், திலகம் அணிதல், குடுமி, அந்தக் கச்சம் அணிதல் எதுவாக இருந்தாலும், சொல்லுதல் மட்டுமல்ல, செய்பவர்களாக, இருக்கின்றனர்.

- இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை இங்கே அதிகம். இங்கிருந்து நேபாள நாட்டின் எல்லை, 700 கிலோமீட்டர் open border உள்ளது. இங்குள்ள மிதிலா பிரதேசம். மிதிலா ராமாயணத்தின் இன்னொரு பெயர். **''ஸீதாயாஃ சரிதம் மஹத்''** என்று வால்மீகி ராமாயணத்தில் கூறியிருக்கிறார், ராமாயணம் என்பது பெயர், அதோடு சேர்த்து இன்னொரு பெயர் ஸீதாயாஃ சரிதம் மஹத் அப்படியே ஸீதா தேவி சிசுவாக பூமியிலிருந்து வெளிவந்தது, அது தேவியின் அவதாரம். அந்தப் பகுதியே மிதிலா பிரதேசம். இங்கே அருகிலேயே நமது அண்டை நாடான நேபாளில் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரே ஒரு அறிவிக்கப்பட்ட ஹிந்து நாடாக இருந்தது.

- ஸீதாதேவி, மிதிலா, போன்றோர் பீகாரின் பண்பாடுகளின் அடயாளம்.

- அங்கே ஜனக்பூரிலும் பெரிய பெரிய palace முதலியவை உள்ளன. அப்படியே தனுஷா உள்ளது, எல்லாம் ஸீதாமட்ஹி முதலியவை உள்ளன. அப்படியே ஸீதா தேவியின் இந்த இடம். அப்படியே ஸீதையின் குணமே, பக்தியே, நல்ல நடத்தையே பாரதிய பெண்கள் வர்க்கத்தின் ஆதர்ஷம் ஆகும் என்பது முக்கியம். இப்படிப்பட்ட ஸீதையின் பிறப்பிடம் இந்தச் சுற்றுப் பகுதியில் உள்ளது, அதனால் இவ்வளவு முக்கியமான இடம் இது.

- பாரதீய கலாசாரம் உலகத்தில் மிகச் சிறந்த கலாசாரம். அங்கே பங்களா இருக்கலாம். அமெரிக்காவில் வேறு நாட்டில் பெரிய பெரிய, சில இடங்களில் தங்கம் வெள்ளியும் இருக்கலாம். தங்கம் வெள்ளி இங்கிருந்தும் போயுள்ளது. வெளி நாட்டிற்காக சில வைரம் முதலியவை இங்கிருந்தும் கோஹினூர் முதலியவை இங்கிருந்தும் போயுள்ளது. அது வேறு விஷயம்.

**ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர!!**

(அடுத்த இதழில் தொடரும்)

# 6. ஸ்ரீ ஸூத ஸம்ஹிதை என்று அழைக்கப்படும் ஶ்ருதி ஸம்ஹிதையின் தமிழ் விளக்கவுரை.

*ஸு. ஸுதர்ஶன கனபாடிகள்*

மதுரை

## நந்திகேஶ்வர-விஷ்ணு ஸம்வாதம்

(3ம் அத்யாயத்தின் தொடர்ச்சி)

நந்திகேஶ்வரரின் அறிவுரையினால் விஷ்ணு முதலான தேவர்கள் ஶிவமாயையில் இருந்து விடுபட்டவர்களாக லக்ஷ்மீ முதலான தங்களுடைய மனைவியோடு சேர்ந்து கழுத்தில் கருப்பு நிறமும், நெற்றியில் பிங்கல (கருப்பும், மஞ்சளும் சேர்ந்தது). நிறமும் கொண்ட அந்த விராட் புருஷரான மஹாதேவரை பூஜித்தனர்.

**पूजयमासुरीशानं पुरुषं कृष्णपिङ्गलम् (सूतसंहिता)**

**ऋतँ सत्यं परंब्रह्म पुरुषं कृष्णपिङ्गलम् (श्रुतिः)**

தேவர்கள் செய்த பூஜையினால் ஸந்தோஷமடைந்து ப்ரஸன்னமான பரமேஶ்வரரை (தண்டம் போல்) தேவர்கள் நமஸ்கரித்து ,

**नमस्ते देवदेवेश नमस्ते करुणालय – भक्तचित्तसमासीन ब्रह्मविष्णुशिवात्मक**

(**நமஸ்தே தேவ தேவேஶ நமஸ்தே கருணாலய** என்று தொடங்கி பக்த சித்த **ஸமாஸீந ப்ரஹ்ம விஷ்ணு ஶிவாத்மக** என்று முடியும் 22 ஶ்லோகங்களால்) பரமேஶ்வரரை ஸ்துதித்து மன்னிப்பு வேண்டினர். கருணா மூர்த்தியான பரமேஶ்வரர் அவர்களை கூட்டிக் கொண்டு (வ்யாக்ரபுரம்) சிதம்பரம் வந்தார். அங்கு ஸுவர்ண ஸபையில் தன்னுடைய ஆனந்த நர்த்தனத்தை காண்பித்து தேவர்களுக்கு வரமளித்தார்.

ஸூத மஹர்ஷியின் அனுக்ரஹத்தால் பரமேஶ்வரரே தேவர்களுக்கு எல்லாம் தேவர். அவரே அனைவராலும் பூஜிக்கத்தக்கவர் என்பதை நைமிஷாரண்ய மஹர்ஷிகள் அறிந்தனர்.

(ஸூத ஸம்ஹிதையில் ஆங்காங்கே வரும் ஸ்தோத்ரங்களை தனியாக தொகுத்து இறுதியில் பார்க்கலாம். )

## விபூதி மஹிமை

**मद्यं पीत्वा गुरुदारांश्च गत्वा स्वर्णस्तेयं ब्रह्महत्यां च कृत्वा ।**
**भस्मच्छन्नो भस्मशय्याशयानो रुद्राध्यायी मुच्यते सर्वपापैः ।।**

**शातातपः**

தினமும் உடல் முழுக்க விபூதி பூசிக் கொள்வதாலும், விபூதி படுக்கையில் படுப்பதினாலும், தினமும் ருத்ர ஜபம் செய்வதாலும், பஞ்ச மஹா பாபங்கள் முதலான எல்லா பாபங்களும் நீங்கும்.

**இது ஸம்பந்தமான கதை:-**

முன்னொரு காலத்தில் துர்வாஸ மஹர்ஷி விபூதி ருத்ராக்ஷம் தரித்து ருத்ர ஜபம் செய்து கொண்டு பித்ரு லோகம் சென்றார். அங்கு நன்கு உபசரிக்கப்பட்டவராக, பித்ருக்களிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது பித்ருலோகம் ஸமீபத்தில் இருந்த கும்பீ பாகம் என்னும் நரகத்திலிருந்து, மஹா கோரமான அழுகை, காப்பாற்றும்படியான கதறல்களைக் கேட்டார். ஶிவ நிந்தனை, தேவீ நிந்தனை, விஷ்ணு நிந்தனை, வேத நிந்தனை, தேவ நிந்தனை செய்தவர்கள், அம்மா, அப்பா, குரு, பெரியோர், புராண, தர்மஶாஸ்த்ர, ப்ராஹ்மண நிந்தனை செய்தவர்கள், அதர்ம வழியில் தன் விருப்பப்படி வாழ்ந்து பாபங்களைச் செய்தவர்கள் அனைவரும் அந்த கும்பீபாக நரகத்தில் கொதிக்கும் எண்ணெயில் துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்படிப்பட்ட பாபிகளை கருணாமூர்த்தியான துர்வாஸ மஹர்ஷி எட்டி நின்று பார்த்தார். உடனே அந்த கும்பீபாக நரகத்தில் இருந்த அனைவரும் ஸுவர்க லோக ஸுகத்திற்கும் மேலான ஸுகானுபவம் அடைந்து மகிழ்ந்தனர். இதனால் குழப்பம் அடைந்த யமதூதர்கள் யமனிடம் தகவலைத் தெரிவித்தனர். யமன் அங்கு வந்து ஆராய்ந்து பார்த்த பிறகும் அதன் சரியான காரணம் அவருக்கு பிடிபடவில்லை. தகவல் அறிந்த விஷ்ணு, ப்ரஹ்மா, இந்திரன் முதலான தேவர்கள் எல்லோரும் அங்கு வந்து ஒன்று கூடி விசாரம் செய்த பிறகும் யாருக்கும் அதன் சரியான காரணம் தெரியவில்லை. ஆதலால் அனைவரும் கைலாஸத்திற்கு சென்று பரமேஶ்வரரை வணங்கி விஷயத்தை தெரிவித்தனர். துர்வாஸ மஹர்ஷியின் நெற்றியில் இருந்த விபூதியின் சிறு துகள்கள் காற்றினால் அந்த கும்பீபாக நரகத்தில் விழுந்ததால் தான் அங்குள்ளவர்கள் ஸுகம் அடைந்தனர் என்ற பேருண்மையை மஹாதேவர் அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

பரமேஸ்வரரின் அனுக்ரஹத்தால் கும்பீபாக நரகத்தில் இருந்த அனைவரும் கைலாஸத்தை அடைந்து பத்ர கணங்களாக ஆகினர். அந்த நரகத்தை பித்ரு தீர்த்தமாக மாற்றி அங்கு லிங்கத்தையும், அம்பிகையையும் ப்ரதிஷ்டை செய்து பித்ரீஸ்வரர் பித்ரீஸ்வரீ என்று பெயரிட்டு வழிபட்டனர். தொலைவில் வேறொரு இடத்தில் புதிதாகக் கும்பீபாக நரகத்தை உண்டாக்கி அன்று முதல் அங்கு விபூதி தாரணம் செய்தவர்கள் யாரும் ப்ரவேஶிக்கக் கூடாது என்று தடை போட்டனர்.

पुनश्च दूरदेशे तु कुम्भीपाको विनिर्मितः।
निरुद्धं शैवगमनं देवैस्तत्र तु तद्दिनात् ।। देवीभागवतम्

இப்படியான மஹிமை கொண்டது விபூதி. அதை தரிப்பவர்கள் பரமேஸ்வரரின் அனுக்ரஹத்தால் ஸகல விதமான பாபங்களும் விலகி கைலாஸத்தை அடைவார்கள் என்பது ஸர்வ நிஶ்சயம்.

(ஈஶ்வர த்யானமும், நெற்றியில் தரிக்கும் விபூதியும் இருந்தால், எத்தகைய கோரமான நரகச் சூழலும் (மனக் கவலைகளும்) நொடிப் பொழுதில் விலகி கைலாஸமாக (மனம் பேரானந்தமாக) மாறும்.

தொடரும்


।। श्रीः ।। Cell : 9840217036

V.K.N. PRINTERS

164, R.H. Road, MYLAPORE, CHENNAI-4, e:mail:vknprinter@gamil.com
DTP PRINTING & PUBLISHING, ALL LANGUAGES RELIGIOUS BOOKS etc.,
(అన్ని భాషలలోను ముద్రించి ఇవ్వబడును.)
Sanskrit, Tamil, Old Grantham, Hindi, Telugu, Kannada, Malayalam and other languages.
Transliteration are available in all preferable languages.
70, 80 సంవత్సరములకు ముందున్న పురాతన గ్రంథ, శ్లోక పుస్తకములను
కొత్తగా మరల టైప్ చెయ్యకుండా New Font లో ముద్రించి ఇవ్వబడును.
దిద్దుబాటులుంటే (with Editing) సరిచేసి ఇవ్వగలము. (without proof reading)

60, 70, 80 வருடங்களுக்கு முன்புள்ள பழைய க்ரந்த புத்தகங்களும், ச்லோக புத்தகங்களும், மீண்டும் Type செய்யாமல் புதிய எழுத்துக்களில் (New Font) அச்சிட்டுத்தரப்படும்.

# அநுகீதாபர்வம்

அநுகீதாபர்வம் (தொடர்ச்சி.)

## முப்பதாவது அத்யாயம்

(பிராம்மணர் கொலை கூடாது என்பதை விளக்கப் பரசுராமர் கதையைத் தம்மனைவிக்குக் கூறியது.)

பெண்ணே! இந்த விஷயத்திலும் கார்த்தவீர்யனுக்கும், ஸமுத்திரத்திற்கும் நடந்த ஸம்பாஷணையும் புராதனமுமான இந்த இதிஹாஸத்தை எடுத்துக் கூறுகின்றனர். ஆயிரம் கைகள் உள்ளவனும், ஸமுத்திரம் வரையிலுள்ள பூமியை வில்லால் ஜயித்தவனுமான கார்த்தவீர்யார்ஜுனன் என்னும் ஓர் அரசன் இருந்தான். பலத்தால் கர்வம் கொண்ட அவன் ஒரு ஸமயம் ஸமுத்திரத்தின் அருகில் ஸஞ்சரித்துக் கொண்டு ஸமுத்திரத்தின் மீது நூறு பாணங்களைப் பிரயோகித்தான் என்று நமக்குக் கேள்வி.

ஸமுத்திரமானது அவனை நமஸ்கரித்து அஞ்சலி செய்து கொண்டு, வீர! (என் மீது) பாணங்களைப் பிரயோகம் செய்யாதே. உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? ராஜஸ்ரேஷ்ட! நீ பிரயோகம் செய்த சிறந்த பாணங்கள் என்னை அடைந்திருக்கும் பிராணிகளைக் கொல்லுகின்றன. பிரபுவே! அவைகளுக்கு அபயத்தைக் கொடு என்று சொல்லிற்று. 'கார்த்தவீர்யார்ஜுனன், யுத்தத்தில் எனக்குச் சமமான அவனை (எனக்கு)ச் சொல்' என்று சொன்னான். 'ஸமுத்திரம், அரசனே! ஜமதக்னி மஹரிஷியைப் பற்றி நீ முந்திக் கேள்விப்பட்டிருப்பாய். அவருடைய புத்திரர் உனக்கு உள்ளபடி அதிதி பூஜை செய்யத் தகுந்தவர்' என்று சொல்லிற்று. பிறகு, அந்த அரசன் அதிக கோபத்தால் மூடப்பட்டவனாகி அந்த (ஜமதக்னியின்) ஆஸ்ரமம் சென்று பரசுராமரையே அடைந்தான். அவன் (தன்னுடைய) பந்துக்களுடன் பரசுராமருக்குப் பிரதிகூலமான காரியங்களைச் செய்து மஹாத்மாவான அவருக்கு மனவருத்தத்தை உண்டு பண்ணினான் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவளே !

பிறகு, அளவற்ற தேஜஸுள்ள பரசுராமருக்கு அப்பொழுது பகைவரின் படைகளை எரிப்பதான கோபாக்னியானது மிகவும் ஜ்வலித்தது. பிறகு, அந்தப் பரசுராமர் கோடாலியை எடுத்துக் கொண்டு ஆயிரம் கைகளுள்ள அந்தக் கார்த்தவீர்யார்ஜுனனை அனேகம் கிளைகளுள்ள மரத்தைப் போல் விரைவாக வெட்டினார். கொல்லப்பட்டு விழுந்திருக்கும் அந்தக் கார்த்தவீர்யார்ஜுனனைக் கண்டு (அவனுடைய) பந்துக்கள்

அனைவரும் ஒன்று கூடிக் கத்திகளையும், சக்திகளையும் எடுத்துக் கொண்டு பரசுராமரைச் சூழ்ந்து கொண்டார்கள். பரசுராமரும் வில்லை எடுத்துக் கொண்டு விரைந்து ரதத்தில் ஏறிச் சரமாரி ஆக அம்புகளைப் பொழிந்து அரசனுடைய படையை அடித்தார்.

பிறகு, சில க்ஷத்திரியர்கள் ஜமதக்னியைக் கொன்று விட்டு ஸிம்மத்தால் பீடிக்கப்பட்ட மான்கள் போலக் கிரி துர்க்கங்களில் புகுந்தார்கள். அந்தப் பரசுராமரிடம் பயந்து தமக்கு ஏற்பட்ட கர்மாவை அனுஷ்டிக்காத அவ்வரசர்களுடைய பிரஜைகள் பிராம்மணர்களைக் காணாமையால் சூத்திரத் தன்மையை அடைந்தார்கள். இவ்விதம் திராவிடர்களும், ஆபீரர்களும், புண்ட்ரர்களும், சபரர்களுமான அவர்கள் க்ஷத்திரிய தர்மம் இல்லாததினால் சூத்திரத் தன்மையை அடைந்தார்கள். பிறகு, கணவரை இழந்த க்ஷத்திரிய ஸ்திரீகளிடம் பிராம்மணர்களால் உண்டு பண்ணப்பட்ட க்ஷத்திரியர்களைப் பரசுராமர் அடிக்கடி வெட்டினார்.

(இவ்விதம்) இருபத்தொருமுறை நடந்தபின் சரீரமற்றதும், திவ்யமும் மதுரமாக இருப்பதும் எல்லா ஜனங்களாலும் கேட்கப்பட்டதுமான வாக்கானது பரசுராமரை நோக்கி, ‘ராம ! ராம !’ (யுத்தத்தினின்று) திரும்பு. ஐயா! இந்த க்ஷத்ரிய அதமர்களை அடிக்கடி கொல்வதில் என்ன பிரயோஜனத்தைக் காண்கிறாய்?’ என்று சொல்லிற்று. அவ்வாறே அப்பொழுது ரிசீகர் முதலான பிதாமஹர்களும் மஹாத்மாவான அந்தப் பரசுராமரை நோக்கி, பெரிய பாக்கியமுள்ளவனே! (யுத்தத்தினின்று) நிருத்தியடை என்று சொன்னார்கள். ‘பரசுராமரோ தந்தையின் வதத்தைப் பெறாமல் அந்த ரிஷிகளை நோக்கி, நீங்கள் இப்பொழுது என்னைத் தடுக்கலாகாது’ என்று சொன்னார். பித்ருக்கள் சொல்லலானார்கள். ‘ஜயிப்பவர்களுள் சிறந்தவனே ! நீ அற்பர்களான க்ஷத்திரியர்களைக் கொல்லத் தக்கவன் அல்ல. பிராம்மணனாக இருக்கும் நீ இப்பொழுது அரசர்களைக் கொல்வது தக்கதன்று.

(தொடரும்)

சான்றோர்கள் மேகத்துக்கு ஒப்பானவர்கள். தமக்குக் கிடைத்ததை மற்றவர்களுக்கு இலவசமாக வழங்கி விடுவார்கள். ரகு வம்சம் 4- 86

ஆதவன் தாமரையை மலரச் செய்கிறான். சந்திரன் அல்லியை மலரச் செய்கிறான். மேகம் லோகம் முழுதும் மழை பொழிகிறது. நல்ல மனிதன் எப்போதும் இது போலவே கேட்காமலே பிறருக்கு நன்மை செய்கிறான்.

நீதி சதகம் 63

# சிவனடியார்கள் சரித்திரம்

*கலை ராம வெங்கடேசன்*

## ３. மெய்ப்பொருள் நாயனார்



உண்மையே இறைவனின் மறுவடிவம் என்ற கொள்கையுடன் தன் வாழ்க்கையை அர்பணித்த சிறந்த சிவபக்தர் மெய்ப்பொருள் நாயனார் ஆவார். திருக்கோவிலூர் என்ற ஊரை தலைநகராகக் கொண்ட சேதிநாட்டின் அரசராக இவர் இருந்தார். நான்மறை வேதங்கள் வகுத்த நெறிப்படி அன்பும், நீதியும் தழைத் தோங்கும் வண்ணம் அரசாட்சி செலுத்தி வந்தார். இவரது நல்லாட்சியில் திருக் கோயில்கள் எங்கும் ஆகம முறைப்படி மணியோசை ஒலிக்க இன்னிசைப் பாடல்களுடன், ஆடல்களும் கூடிய வழிபாடுகள் எப்பொழுதும் குறைவின்றி நடந்த வண்ணம் இருந்தது.

உண்மையான சிவன் அடியார்களையும் பெயருக்கு திருநீற்றை உடல் முழுவதும் பூசிக் கொண்டு சிவ சிவ என்று உதட்டளவில் கூறிக் கொண்டு நயவஞ்சகமாக நடிப்பவர்களையும், பிரித்துப் பார்க்காமல் அனைவரையும் அடியார்களாகவே நோக்குகின்ற பரந்த பக்தி மனப்பான்மை அவரிடம் இருந்தது. ஒருவர் சிவ சிவ என்று உச்சரித்த மாத்திரத்திலேயே, அவரது சிவ வேடமே பரம்பொருள் என்று எண்ணி அவரிடத்தில் சிவபெருமானையே தரிசிக்கும் மனப்பாங்கு அவரிடம் இருந்தது. போர்க் களங்களில் இவர் அஞ்சா நெஞ்சினனாக நின்று போரிட்டு எதிரிகளை வெற்றி கொள்ளும் திறத்தை நாடே அறிந்து போற்றியது.

அண்டை நாட்டு அரசன் முத்த நாதன் என்பவன் மெய்ப் பொருள் நாயனாருடன் பலமுறைப் போர் தொடுத்து தோற்று அவமானப் பட்டான். இவ்வாறு பலமுறை தோற்றுப் போன அவன் மெய்ப் பொருளாரைப் போர்க் களத்தில் நேருக்கு நேர் வெல்வது கடினம் என்றும் அவரை வஞ்சகத்தால் வெற்றி கொண்டு விடலாம் என்றும் முடிவு செய்தான். மெய்ப் பொருளார் சிவ வேடத்தில் வைத்திருக்கும் நம்பிக்கையைத் தெரிந்து கொண்டு தானும் சிவனடியார் போல உடல் முழுதும் திருநீறு பூசிக் கொண்டு சிவயோகியின் வடிவம் தாங்கி தன் நயவஞ்சகத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினான். ஒரு சிறு கொடுவாளினை எடுத்து அதை ஆகம ஓலைச் சுவடிகள் வைத்துக் கட்டப்பட்டிருந்த பட்டுத் துணிக்குள் மறைத்து வைத்துக் கொண்டான். சமயம் பார்த்து மன்னனை கொல்லும் முடிவுடன், இவ்வாறு திருநீற்றுப் பொலிவுடன் கூடிய சிவ யோகியின் வடிவம் தாங்கி பொய்யான படுபாதகச் செயலைச் செய்யக் கூடிய வஞ்சனை எண்ணம் கொண்டவனாய் அரண்மனைக்குள் புகுந்தான். சிவனடியார்களை எவ்வித தடையுமின்றி அரண்மனைக்குள் நுழைய அனுமதிக்குமாறு காவலர்கள் அறிவுறுத்தப்பட்டு இருந்தனர். எனவே எவ்வித தடையுமின்றி முத்த நாதன் அரசன் உறங்குகின்ற அறையை அடைந்தான். அங்கு மெய்க் காவல் பணி புரியும் தத்தன் என்பவன் முத்த நாதனை தடுத்து நிறுத்தி, இது அரசர் உறங்கப் போகும் சமயம் என்றும் அவனை வேறொரு சமயத்தில் வருமாறும் கேட்டுக் கொண்டான்.

இதைக் கேட்ட அக்கொடுங்கோலன் 'அரசனுக்கு உறுதிப் பொருள் கூறப்போகும் என்னை தடுக்க நீ யார்?' என்று கூறியபடியே அரசனின் படுக்கை அறைக்குள் புகுந்தான். கபட வேடத்தினான முத்த நாதனின் செய்கையைக் கண்டு சந்தேகமுற்ற தத்தன் நடப்பதை மறைந்து நின்று தீவிரமாகக் கவனிக்கலானான். உள்ளே புகுந்த வஞ்சக வேடத்தானை சிவயோகியார் என்றே கருதிய அரசியானவள் பதறி எழுந்து மன்னனையும் விரைந்து எழுப்பினாள்.

துயில் நீங்கி எழுந்து எதிரே நின்ற நயவஞ்சகனை சிவபெருமானின் மெய்யான தொண்டன் என்றே கருதி தன் கைகளை குவித்து வணங்கிய அரசனிடம் தான் சிவபெருமானே கூறி அருளிய ஆகமத்தின் உறுதிப் பொருளை அரசனுக்கு தனிமையில்தான் எடுத்துரைக்க வேண்டும் என்றான். இதைக் குறிப்பால் உணர்ந்த மகாராணியும் தன் அந்தப் புரத்திற்குச் சென்ற நிலையில் அரசனும் கொடுங்கோலனுமே அந்த அறையில் இருந்தனர். வஞ்சக வேடதாரியை உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி, அவனுக்கு அரசன் தலை வணங்கிய போது இதுவே சமயம் என்றெண்ணிய படு பாதகன் தான் ஓலை சுவடிக்குள் மறைத்து வைத்திருந்த குறுவாளினை உருவி உறுதி பொருள் கேட்க தலை வணங்கி நின்ற மன்னவனை குத்தி விட்டான். மறைந்திருந்து பார்த்துக்

கொண்டிருந்த தத்தன் கொலைகாரன் மீது புலியென சீறிப் பாய்ந்தான். இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்து கிடந்த மெய்ப் பொருளார் தத்தனிடம் ‘இவர் நம்மவர்! இவரை ஒன்றும் செய்ய வேண்டாம்’ என்று தடுத்தார். இவருக்கு எவ்வித துன்பமும் நேரா வண்ணம் தத்தனையே துணையாக இருந்து நாட்டின் எல்லை வரை சென்று விட்டு விட்டு வருமாறு கட்டளையிட்டு வீழ்ந்தார்.

இத்துயரச் சம்பவம் ஊர் முழுவதும் பரவி மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. மன்னனைக் கொன்ற மாபாவியைக் கொல்வதற்காக வெகுண்டு எழுந்து வந்த மக்களைத் தடுத்த தத்தன் மன்னரது கட்டளையை எடுத்துக் கூறி அடியவருக்கு எவ்வித தீங்கும் நேரக் கூடாது என்பதை வலியுறுத்தினான். பிறகு அவனை ஊரின் மக்கள் நடமாட்டம் இல்லாத எல்லைப் பகுதியில் பாதுகாப்பாக விட்ட பின் அரண்மனையை அடைந்தான். சிறிது சிறிதாக உயிர் நீங்கும் நிலையில் இருந்த அரசன், தத்தன் செய்த தீரச் செயலைக் கேட்டு மனம் மகிழ்ந்தான். சிவபெருமானையே சிந்தித்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிய அரசன் மக்களிடம் தான் வணங்கிப் போற்றிய சைவத்தையும் திருநீற்றையும் சிவ சின்னங்களில் நம்பிக்கையையும் அடியார்கள் இடத்தில் அன்பையும் சிறிதும் கைவிடாமல் ஒரு குறையுமின்றி முழு நம்பிக்கையுடன் காப்பாற்றுவீராக என்று ஆனந்த கண்ணீர் மல்கக் கூறினான். தான் இறுதி மூச்சு விடும் நேரத்திலும் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தையே உயிர் மூச்சாகக் கொள்ள வேண்டும் என்று மக்களுக்கு அறிவுறுத்தினான். இவ்விறுதி உரைத்த படியே நடராசப் பெருமானை தன் மனக் கண்ணில் நினைத்து வணங்கிய அதே நேரத்தில் சிவபெருமான் அவர்முன் தோன்றி விண்ணோருக்கும் எட்டாத அருட் காட்சி அளித்து எப்போதும் தன் திருவடி நிழலிலேயே இருந்து தம்மை வணங்கிக் கொண்டு இருக்கும் சிறந்த பேற்றினை அவருக்கு அளித்து அருளினார்.

இறுதி வரை தான் கொண்ட கொள்கையையும், கடமையையும் தவறாமல் காத்து தம்மை கொன்ற கொலையாளியையும் அவன் அணிந்திருந்த சைவச் சின்னங்களின் மேன்மையினால் காப்பாற்றிய மெய்ப் பொருள் நாயனார் சிறந்த தியாகச் சுடராக நம் முன் காட்சியளிக்கிறார். மாபெரும் கொள்கையை மேற் கொண்டு வாழ்ந்து உயிரை விட்டாலும் அவர் வென்றார் என்றே நாம் கொள்ள வேண்டும். அழிந்தது உடம்பே தவிர அவரது உயிரோ கொள்கையோ அல்ல. எனவே தான் சுந்தரர் **‘வெல்லுமாம் மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்’** என்று பாடினார்.

(தொடரும்)

# ஸ்ரீ அமரநாத மாஹாத்மியம்

## முக்கிய அம்சங்கள்

### பி. ஆர். கண்ணன்

இந்த சுவாரஸ்யமான மாஹாத்மியம் ப்ருங்கீஶ ஸம்ஹிதையில் இடம் பெறுகிறது. ப்ருங்கீஶ ஸம்ஹிதை காஷ்மீர ப்ரதேசத்தின் ஸ்தல புராணமாகும். நம் காஞ்சி பெரியவர்கள் காஷ்மீரில் விஜயம் செய்த போது கிடைக்கப் பெற்ற அரிய நூலாகும். ''**ப்ருங்கீசர்**'' என்பது சிவபெருமானின் அரிதாகக் கேட்கப்படும் ஒரு திரு நாமம் ஆகும். ப்ருங்கி முனிவர் சிவபெருமானின் அதீத பக்தர்; அவர் பார்வதியுடன் கூட சிவனை வழிபட விரும்பவில்லை. சிவபெருமான் மற்றும் பார்வதி கைலாசத்தில் ஒன்றாக அமர்ந்திருந்த போது, முனிவர் ''ப்ருங்கி'' (தேனீ) வடிவம் எடுத்து, பார்வதியைச் சுற்றாமல், இருவருக்குமிடையே இருந்த இடைவெளியில் ஊடுருவிச் சென்றார். அதனால் பார்வதி அவரை சபித்து, உடலின் சக்தி அனைத்தையும் இழக்கச் செய்தாள்; அவர் வெறும் எலும்புக் கூடாக மாறினார். பின்னர் சிவனும் சக்தியும் ஒன்று பிரிக்க முடியாதவர்கள் என்பதை உணர்ந்து மன்னிப்பு கேட்ட போது, அவருக்குத் தாங்கி நடக்க மூன்றாவது கால் அருளப்பட்டது.

அமரநாத மாஹாத்மியம், இமயமலையின் தெற்குப் பகுதியில் உள்ள தீர்த்தங்களின் தொகுப்பான ''**தக்ஷிண பார்ஶ்வ உபதீர்த்த சங்க்ரஹம்**'' என்னும் பகுதியில் வருகிறது. ஆரம்பத்திலேயே, வெறும் தரிசனம் அல்ல, ''யாத்திரை'' மிக முக்கியம் என்று வலியுறுத்தப்படுகிறது. இன்றும் அமரநாத தரிசனம் ''**அமரநாத யாத்திரை**'' என்றே அழைக்கப்படுகிறது.

இந்த யாத்திரையின் முழு விவரமும் பைரவராகிய சிவன், பைரவியாகிய பார்வதிக்கு உபதேசிப்பதாக அமைந்துள்ளது. கால பைரவர், காசியில் சிறப்பாக வழிபடப்படும் சிவனின் ஒரு அம்சமாகவும், மனிதனின் இறுதி தருணங்களோடும் தொடர்பு உடையவராகவும் கருதப்படுகிறார். காசியில் மரணமடையும் ஒருவருக்கு, அவர் முன்பிறவிகளில் செய்த பாவங்களுக்காக பைரவர் தண்டனை அளிப்பார். அதன் பின்னர் சிவன், அவருடைய வலது காதில் ராம நாம தாரக மந்திரத்தை உச்சரித்து மோக்ஷம் அருளுவார். பைரவரின் தண்டனை குறுகிய காலத்தில் தீவிரமான துன்பத்தை அனுபவிக்கச் செய்வதாகும்; அந்த ஜீவன் பல பிறவிகளில் அனுபவிக்க இருக்கும் துன்பத்தை இவ்வாறு சுருக்கமாக அனுபவிக்கிறது.

அமரநாதர், 16 க்ஷேத்திரங்களையும் 23 தீர்த்தங்களையும் தரிசித்து, கடினமான யாத்திரையை நிறைவு செய்தவர்களுக்கு மோக்ஷம் அருளுவதாக மாஹாத்மியம் கூறுகிறது. இதை பைரவர் வெளிப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.

சிவன் முதன்முதலில் அமரநாத லிங்கத்தை குறிப்பிடும் போது, அதை **''ஸ்வதா லிங்கம்''** என்று அழைக்கிறார். அதாவது, அந்த லிங்க தரிசனத்தால் பித்ருக்களின் அருள் கிடைக்கும் என்பதைக் குறிக்கிறது.

**ப்ரணம்ய விதிவத்பக்த்யா ஸ்வதாலிங்கம் ஸநாதநம் ।**
**நரோ ந லிப்யதே பாபை: கோடிஜந்மஸமுத்பவை ॥** (1.22)

**''ஸ்வதா தேவி''** என்பது அக்னியின் துணைவி; பித்ருக்களுக்கு அர்ப்பணிக்கப்படும் ''கவ்ய''ங்களை அவர்களிடம் கொண்டு செல்லும் சக்தியை அக்னிக்கு அளிப்பவள்.

அமரநாத லிங்கத்தின் தரிசனம், ஸ்பரிசம், பூஜை மற்றும் வந்தனம் அனைத்துப் பாவங்களையும் நீக்குவதாகவும் வலியுறுத்தப்படுகிறது.

**தர்ஶநாத்ஸ்பர்ஶநாச்சாபி பூஜநாச்சாபி வந்தநாத் ।**
**அமரேஶஸ்ய லிங்கஸ்ய முச்யதேஸர்வகில்பிஷை : ॥** (1.23)

**யாத்திரை முறையும் தீர்த்த ஸ்நானங்களும் :**

சிவன் கூறிய யாத்திரை முறையில் மொத்தம் 23 ஸ்நானங்கள் உள்ளன – அதில் 6 விபாஸா (விதஸ்தா) நதியிலும், 17 கங்கை மற்றும் பிற தீர்த்தங்களிலும் செய்யப்பட வேண்டும்.

**ஷட்ஸ்நாநாநி விதஸ்தாயாம் ப்ரோக்தாநி ஜகதம்பிகே ।**
**ஸப்ததஶஸ்தலஸ்தாநாநி ஸ்நாநாந்யந்யாநி ஸுந்தரி ॥**
**த்ரயோவிம்ஶபிதா யாத்ரா ஸ்ம்ருதா ஹ்யமரநாதகா ॥** (1.24,25)

விதஸ்தா, ருக் வேதத்தில் புகழப்படும் ''ஸப்தஸிந்து'' நதிகளில் ஒன்றாகும். அது ஸிந்து நதியின் கிளை நதியாகும்.

(தொடரும்)

**Pujyashri Satya Chandrasekharendra Saraswati Swamiji Jayanthi Mahotsavam was celebrated with devotional fervor at Shrimatam, Kanchipuram (11th May 2026).**


























# ஸ்ரீ மடத்தில் ஆனி மாத விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| *25-06-2026* | வியாழன் | ஸர்வ நிர்ஜல ஏகாதசி ஸ்வாதி தேர் ;<br>ஸ்வாதி வேத பாராயணம் |
| *26-06-2026* | வெள்ளி | த்வாதசி |
| *27-06-2026* | சனி | ப்ரதோஷ பூஜை அனுஷம் தேர் ;<br>அனுஷம் வேத பாராயணம் |
| *29-06-2026* | திங்கள் | பௌர்ணமீ பூஜை; மூலம் தேர் ;<br>மூலம் ; வேத பாராயணம் |
| *02-07-2026* | வியாழன் | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| *04-07-2026* | சனி | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| *10-07-2026* | வெள்ளி | ஏகாதசி |
| *11-07-2026* | சனி | த்வாதசி |
| *12-07-2026* | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |

*19-06-2026 ; 26-06-2026 03-07-2026 ; 10-07-2026*

வெள்ளிக் கிழமை பூஜை மாலையில் ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரி
சமேத ஸ்ரீசந்த்ர மௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை



**உடற்பயிற்சிகள் தேகத்தின் தசைகளை வலுவாக்குவது போல் அடிக்கடி மந்திரங்களை உச்சரிப்பது நம்முடைய நரம்பு, நாடிகளை பலம் பெறச் செய்கிறது. இதனால் சித்தம் சுத்திப் பெற்று நம் உள் கடவுள் தங்கும் இடம் தூய்மை ஆகிறது. நடத்தையாலும், ஆசார அநுஷ்டானங்களாலும் தகுதி பெற்றவர்கள் மந்திரங்களை அறிந்து அவைகளைப் பயனுள்ள வகையில் உபயோகிக்கவும், காப்பாற்றவும் முடியும்.**

# முகாம் நிகழ்ச்சிகள்

நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி

**ஏப்ரல் 24 :** காஞ்சிபுரம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மஹாவித்யாலயா (SCSVMV) பல்கலைக் கழகத்தில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளின் திருச் சன்னிதியில், ஜகத்குரு ஆதி சங்கராசார்யரின் ஜயந்தி மஹோத்ஸவம் ஆன்மிக எழுச்சியுடன் சிறப்பாக நடைபெற்றது.



60 அடி உயரமுடைய ஏகசிலா ஸ்ரீ ஆதி சங்கரர் விக்ரஹத்திற்கு அபிஷேகம் மற்றும் விசேஷ பூஜைகள் நடைபெற்றன.

பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பக்தர்களுக்கு அனுக்ரஹ பாஷணம் அருளினார். மாணவர்கள் ஸ்ரீ ருத்ரம், வேத பாராயணம் மற்றும் பக்திப் பாடல்களை சமர்ப்பித்தனர். தோடகாஷ்டகம், சௌந்தர்யலஹரி மற்றும் சங்கராசார்ய ஸ்தோத்ரங்கள் பக்தி பூர்வமாக பாராயணம் செய்யப்பட்டன.

**ஏப்ரல் 26 :** ரிக் வேத சபா ஏற்பாடு செய்த ‘‘சாஸ்திரிய ஸத்சங்க சம்மேளனம்’’ நிகழ்ச்சியின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் ஸ்ரீமடம், காஞ்சிபுரத்திலிருந்து நேரலையாக ஒளிபரப்பப்பட்டன.

**ஏப்ரல் 27 :** வைசாக சுத்த ஏகாதசியை முன்னிட்டு, ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்களின் ஆராதனை காஞ்சிபுரம் ஸ்ரீமடத்தில் பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் திவ்ய சன்னிதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

**ஏப்ரல் 28 :** காஞ்சிபுரத்தில் ''ஸ்ரீதேவி பாகவத மகாபுராண கதா'' நிகழ்ச்சியில் ஸ்வாமி விஸ்வேஷ்வரானந்த கிரிஜி - அனுக்ரஹ பாஷணம் அருளினார்.

**ஏப்ரல் 29 :** மண்டன மிஷ்ர தாம், மஹிஷி தரிசனம் மற்றும் சஹர்ஸா வருகை பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் காலை தர்பங்கா விமான நிலையம் வந்தடைந்தார். பக்தர்கள் மற்றும் அதிகாரிகள் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்றனர். தர்பங்கா மாவட்ட ஆட்சியர் ஸ்வாமிகளை வரவேற்று, அப்பகுதி மக்களின் நலநிலை குறித்து கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து மண்டன மிஷ்ர தாம், மஹிஷி நோக்கிப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. கமலா, கோசி உள்ளிட்ட நதிகளின் மீது அமைந்திருந்த பாலங்கள், பசுமை சூழ்ந்த விவசாய நிலங்கள், வளமான இயற்கைக் காட்சிகள் ஆகியவை பயணத்தை இனிமையாக்கின.

மஹிஷி வந்தடைந்த பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகளை பக்தர்கள் பக்தி பூர்வமாக வரவேற்றனர். ஸ்ரீ ஆதி சங்கரர் மற்றும் மண்டன மிஷ்ரரை நினைவுகூரும் ஆலயத்தில் அனுக்ரஹ பாஷணம் அருளிய ஸ்வாமிகள், பீஹார் மாநிலத்தின் சனாதன தர்ம பாரம்பரியத்தைப் பாராட்டினார்.

மிதிலா பகுதி சீதா மாதாவின் புனித பூமி என்றும், **''ஸீதாயா: சரிதம் மஹத்''** என இராமாயணம் போற்றப்படுவதாகவும் குறிப்பிட்டார். சீதா மாதாவின் தியாகம், துணிவு மற்றும் தர்மநிலை மனிதகுலத்திற்கு உயர்ந்த முன்மாதிரி என எடுத்துரைத்தார்.

**''பிரஸ்தான த்ரயம்''** குறித்து உரையாற்றிய போது, ''ஆதி சங்கரர், மண்டன மிஸ்ரர், உபய பாரதி ஆகிய மூவரின் ஆன்மிகப் பயணம் தொடங்கிய புனித தலம் மஹிஷி'' என சுவையாக விளக்கினார்.

பின்னர் மண்டன மிஸ்ரர் சன்னதியில் வஸ்திர சமர்ப்பணம், தீபாராதனை, பூர்ணாஹுதி மற்றும் கன்யா பூஜை நடைபெற்றன. தொடர்ந்து உக்ர தாரா மந்திரில் கலசாபிஷேகம் மற்றும் விசேஷ அர்ச்சனைகள் நடைபெற்றன.

சஹர்ஸா வந்தடைந்த பின்னர், அங்குள்ள மருத்துவமனைக்கு ஆசி வழங்கிய பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள், பக்தி, சேவை மனப்பான்மை, ஈஸ்வர விசுவாசம் மற்றும் கலாச்சாரப் பண்பின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

**ஏப்ரல்** 30 : காசி தரிசனம் மற்றும் சங்கரா கண் மருத்துவமனை திறப்பு. பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் காசியில் ஸ்ரீ அன்னபூர்ணா தேவி மற்றும் ஸ்ரீ காசி விஸ்வநாதர் தரிசனம் செய்து விசேஷ பூஜைகள் அர்ப்பணித்தார்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஆதி சங்கர ஜயந்தி மஹோத்ஸவ நிறைவு நிகழ்வாக காமாக்ஷி அம்பாள் மற்றும் ஆதி சங்கராசார்யர் உற்சவ புறப்பாடு பக்தி பூர்வமாக நடைபெற்றது.

**காஞ்சி குருபரம்பரா சங்கரா கண் மருத்துவமனை:-**

பீஹாரின் சஹர்ஸாவில் அமைந்துள்ள ‘‘**காஞ்சி குருபரம்பரா சங்கரா கண் மருத்துவமனை**’’ பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகளால் திறந்து வைக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு கணபதி ஹவனம் மற்றும் கலசாபிஷேகம் நடைபெற்றன. பின்னர் மருத்துவமனையின் பல்வேறு வசதிகளை பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் ஸ்ரீ கிரிராஜ் சிங், எம்.பி. ஸ்ரீ சிக்ரிவால், மாவட்ட ஆட்சியர், மேயர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் தமது அனுக்ரஹ பாஷணத்தில் ‘‘**வித்யா, வைத்யம், வேதம்**’’ ஆகியவை காஞ்சி மடத்தின் முக்கிய சேவைத் துறைகள் என எடுத்துரைத்தார். தர்மம், கலாச்சாரம் மற்றும் இந்திய பாரம்பரிய மதிப்புகளை பாதுகாக்கும் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

**''ஸர்வேந்த்ரியானாம் நயனம் பிரதானம்''** எனும் சாஸ்திர வாக்கியத்தை மேற்கோள் காட்டி, கண் சிகிச்சை சேவையின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

**மே 1 :** வாராணசி தரிசனத்தின் போது ஸ்ரீ ஜகந்நாத் தாமிற்கான பூமி பூஜை நடைபெற்றது.

**மே 10 :** ஸ்ரீமடம், காஞ்சிபுரத்தில் சூர்ய நமஸ்காரம் நடைபெற்றது.

**மே 11 :** பூஜ்யஸ்ரீ ஸத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம். பூஜ்யஸ்ரீ ஸத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம் காஞ்சிபுரம் ஸ்ரீமடத்தில் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

மூன்று நாள் மஹோத்ஸவத்தில் வேத பாராயணம், ரிக் ஸம்ஹிதா ஹவனம், இஷ்டி ருத்ர ஹோமம் மற்றும் பூர்ணாஹூதி நடைபெற்றன. கலச தீர்த்தம் பிருந்தாவனங்களில் சமர்ப்பிக்கப்பட்டு விசேஷ பூஜைகள் நடைபெற்றன. ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் உள்ளிட்ட பல்வேறு ஆலயங்களில் இருந்து பிரசாதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

மூன்று நாட்களும் சங்கீத சமர்ப்பணம் மற்றும் அன்னதானம் நடைபெற்றன. தொலைதூர பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்தனர். 71வது பீடாதிபதியான ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஸத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளின் 27வது ஜயந்தி மஹோத்ஸவம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

**மே 13 :** காஞ்சிபுரம் ஸ்ரீமட பிருந்தாவனங்களில் பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளும், பூஜ்யஸ்ரீ ஸத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளும் புஷ்பாஞ்சலி சமர்ப்பித்தனர்.

**மே 14 :** பிரதோஷ பூஜை பூஜ்யஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளால் அனுஷ்டிக்கப்பட்டது.

**மே 18 :** யாத்திரை - நெல்லூர் மற்றும் கோலனுகொண்டா வருகை

பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் காஞ்சிபுரத்தில் இருந்து நெல்லூர் சங்கர மடம் வந்தடைந்து, பக்தர்களுக்கு அனுக்ரஹ பாஷணம் அருளினார். பின்னர் கோலனு

கொண்டா சங்கர மடம் வந்தடைந்தார். பக்தர்கள் பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்றனர். ஸ்ரீ கணபதி சன்னதியில் விசேஷ பூஜைகள் நடைபெற்றன.

**மே 19 :** யாத்திரையின் தொடர்ச்சியாக பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் பலுசுபாடு (ஜக்கய்யபேட்) வந்தடைந்தார்.

**மே** 20 : வாராங்கல் - ஹனம்கொண்டா யாத்திரை

பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ பத்மாக்ஷி ஆலயம், ஸ்ரீ பத்ரகாளி அம்மவாரு தேவஸ்தானம் மற்றும் ஸ்ரீ ருத்ரேஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம் ஆகிய ஆலயங்களை தரிசித்து விசேஷ பூஜைகள் செய்தார்.

**நெலகொண்டபள்ளி தரிசனம் :** பக்த ராமதாசரின் பிறப்பிடமான நெலகொண்ட பள்ளியில் அமைந்துள்ள ''பக்த ராமதாசு தியான மந்திரம்'' தரிசிக்கப்பட்டது.

அங்கு ஸ்ரீ ராமர், சீதாதேவி, லட்சுமணர் மற்றும் ஆஞ்சநேயர் திருவுருக்கள் தரிசிக்கப்பட்டன. பக்த ராமதாசர் பயன்படுத்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க கிணறும் பார்வையிடப்பட்டது.

**அனுக்ரஹ பாஷணத்தில் பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள்:**

- பண்டைய ஆலய பாதுகாப்பு
- இராமாயணப் பெருமை
- ராமநாம மகிமை

ஆகியவற்றை எடுத்துரைத்தார்.

**''ராம பக்தி மந்து கோனரே''** என்ற கீர்த்தனையை குறிப்பிட்டு, ராமநாம ஜபம் நடைபெற்றது. நெலகொண்டபள்ளி **''பக்த வாபி''** எனப் பெயர் சூட்டப்பட்டது.

**மே** 21 : காலேஸ்வரம் - சரஸ்வதி புஷ்கரம் பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ காலேஸ்வர முக்தேஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம் தரிசித்தார். அபிஷேகம், அர்ச்சனை, ஹாரத்தி மற்றும் பூர்ணாஹுதி நடைபெற்றன.

சரஸ்வதி புஷ்கர நிகழ்வில் சங்கல்பம், ஸ்நானம், அனுஷ்டானம் மற்றும் நதி ஹாரத்தி நடைபெற்றது. நக்ஷத்ர மாலா ஸ்லோகங்கள் மற்றும் ஸ்தோத்திரங்கள் பாராயணம் செய்யப்பட்டன. பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் பக்தர்களுக்கு அனுக்ரஹ பாஷணம் அருளினார்.

**மே 22 :** யாதகிரிகுட்டா ஆலய தரிசனம் பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் யாதகிரிகுட்டா ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ஹ ஸ்வாமி ஆலயத்தை தரிசித்தார்.

பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்ட பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள், த்வஜஸ்தம்ப பிரதக்ஷிணம் செய்து கர்ப்ப கிரகத்தில் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ஹ ஸ்வாமியை தரிசித்தார்.

அஷ்டோத்தர சதநாம அர்ச்சனை, லக்ஷ்மி நரசிம்ஹ கராவலம்ப ஸ்தோத்திரம் மற்றும் நரசிம்ம பஞ்சாம்ருத ஸ்தோத்திர பாராயணம் நடைபெற்றது. பின்னர் ஸ்ரீ ராமலிங்கேஸ்வர ஸ்வாமி சன்னதி தரிசனம் செய்து, வேத சதஸில் கலந்து கொண்டு அனுக்ரஹ பாஷணம் அருளினார். சாஸ்திர ஞானம், வேதப் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்திய பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள், வேத பண்டிதர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பொன்னாடைகள் வழங்கி கௌரவித்தார். பின்னர் கணபதி ஹோமம் மற்றும் ஆவாஹந்தி ஹவனத்தின் பூர்ணாஹுதியில் கலந்து கொண்டு அருள் வழங்கினார்.

**ஹர ஹர சங்கர**
**ஜெய ஜெய சங்கர**

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

சீடர்களின் கவனத்திற்கு

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்**
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச் சிறந்ததாகும்.

**‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌளீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# ।। मश्रीजगद्गुरु मसत्यचन्द्र शेखरेन्द्रमसरस्वत्यष्टकम् ।।

## நிதிஸ்வர சர்மா
திருவிடை மருதூர்

(श्री) श्रीकामकोटिपीठस्य शोभां वर्धयितुं भुवि ।
अवतीर्णं गुरुं वन्दे सत्यश्रीचन्द्रशेखरम् ।। १ ।।

மோக்ஷ புரியான பெருமைமிகு காஞ்சியில், சுமார் 2500 வருடங்களுக்கு முன் ஸாக்ஷாத் பரமேஸ்வரனின் அவதாரமான ஸ்ரீ ஆதிஸங்கர பகவத் பாதர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, இன்று வரை அவிச்சின்னமாக விளங்கி வரும் ஸ்ரீ காமகோடி பீடத்தின் மாபெரும் பெருமையையும், ஆத்ம ஞானச் சுடரையும் அகிலம் முழுவதும் மேலும் விஸ்தரிக்கவும், ஸனாதன தர்மத்தைக் காத்தருளவும், இந்தப் புண்ணிய பாரத பூமியில் அவதரித்த ஜகத்குரு ஸ்ரீ ஸத்ய சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

(स) स्वगुरौ परमां भक्तिं वहन्तं हृदये सदा ।
संसारतापहन्तारं सत्यश्रीचन्द्रशेखरम् ।। २ ।।

அவிச்சின்னமாக வரும் காமகோடி பரம்பரையில் வந்த தமது ஸத்குருவிடம் எப்பொழுதும் அளவற்ற, பரம பக்தியைத் தமது ஹ்ருதயக் கமலத்தில் ஸதா ஸர்வ காலமும் தாங்கி இருப்பவரும், அஜ்ஞானத்தினால் ஏற்படும் ஜனன மரணச் சுழற்சியாகிய ஸம்ஸாரத் துயரங்களையும், மனிதர்களைப் பீடிக்கும் மூவகைத் தாபங்களையும் (ஆத்யாத்மிக, ஆதி பௌதிக, ஆதி தைவிகம் என்னும் தாபத்ரயங்களை) தம் கருணைக் கடாக்ஷத்தால் வேரோடு அழித்து அருளுபவருமான ஸ்ரீ ஸத்ய சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

(त्य) त्यक्त्वा सर्वेषणाः सम्यक् तुर्याश्रममुपाश्रितम् ।
तपोनिधिं दयासिन्धुं सत्यश्रीचन्द्रशेखरम् ।। ३ ।।

உபநிஷத்துகள் கூறும் புத்ரேஷணை, வித்தேஷணை, லோகேஷணை ஆகிய மூவகை உலகியல் ஆசைகளையும் (பந்தங்களையும்) பூரணமாகத் துறந்து விட்டு, ஸனாதன தர்மத்தின் உயர்வான நிலையான நான்காவது ஆஸ்ரமமான ஸன்யாஸ ஆஸ்ரமத்தை முறைப்படி ஏற்றுக் கொண்டவரும், ஆத்ம விசாரணையாகிய தபஸையே தமது மாபெரும் செல்வமாகக் கொண்டவரும், தங்களை நாடி வரும் பக்தர்களிடத்தில் அளவற்ற கருணைக் கடலாக விளங்கும் ஸ்ரீ ஸத்ய சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

(चन्) चन्द्रमौलीश्वरं साम्बं पूजयन्तं जगत्कृते ।
चराचरजगद्वन्द्यं सत्यश्रीचन्द्रशेखरम् ।। ४ ।।

ஸ்ரீ ஆதிஸங்கர பகவத் பாதர்களால் கைலாஸத்தில் இருந்து பெறப்பட்ட ஐந்து ஸ்படிக லிங்கங்களுள், காஞ்சியில் பிரதிஷ்டை செய்யப்பட்டதும், மஹா த்ரிபுரஸுந்தரி ஸமேதராக விளங்குவதுமான ஸ்ரீ சந்த்ர மௌளீஸ்வரர் என்னும் 'யோக லிங்கத்தை', அகில உலகம் உய்யும் பொருட்டு (லோக க்ஷேமத்திற்காக) தம் திருக்கரங்களாலேயே அனுதினமும் விதிப்படி மூன்று வேளைகளிலும் பூஜிப்பவரும்; சராசரங்கள் (அசையும் மற்றும் அசையாப் பொருட்கள்) என இந்த ஜகம் முழுவதும் உள்ள அனைவராலும் வணங்கப் பெறுபவருமான ஸ்ரீ ஸத்ய சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

(द्र) द्रष्टारं समभावेन मैत्र्या सर्वजनप्रियम् ।
दान्तं वेदान्ततत्त्वज्ञं सत्यश्रीचन्द्रशेखरम् ।। ५ ।।

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் எவ்வித பேதமுமின்றி 'ஸமத்ருஷ்டியோடு' நோக்குபவரும், தம்முடைய எல்லையற்ற மைத்ரீ பாவத்தினால் (கருணை கலந்த பேரன்பால்) ஸர்வ ஜனங்களுக்கும் மிகவும் பிரியமானவராக விளங்குபவரும், இந்த்ரியங்களை முற்றிலுமாக ஜயித்தவரும் (தாந்தம்), வேதாந்தங்களின் ஆழமான தாத்பர்யங்களை உள்ளங்கை நெல்லிக் கனியென உணர்ந்தவருமான ஸ்ரீ ஸத்ய சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

(शे) शेवधिं सर्वविद्यानां श्रुतिस्मृतिविशारदम् ।
श्रेयोमार्गोपदेष्टारं सत्यश्रीचन्द्रशेखरम् ।। ६ ।।

ஸகல வித்யைகளுக்கும் மாபெரும் உறைவிடமாக (சேவதி) விளங்குபவரும், ச்ருதி எனப்படும் வேதங்களிலும், ஸ்மிருதி எனப்படும் தர்ம சாஸ்த்ரங்களிலும் கரைகண்ட மஹா நிபுணராகவும், ஜீவன்கள் உய்வடைவதற்கான மேலான மோக்ஷ மார்க்கத்தை மக்களுக்கு உபதேசித்து வழிகாட்டும் ஜகத்குருவுமான ஸ்ரீ ஸத்ய சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

(ख) खनिं सद्गुणरत्नानां खण्डिताशेषसंशयम् ।
खेदविच्छेदकं नित्यं सत्यश्रीचन्द्रशेखरम् ।। ७ ।।

நற்குணங்கள் எனப்படும் விலை மதிப்பற்ற நவரத்னங்களுக்கு மாபெரும் சுரங்கமாகத் திகழ்பவரும், சிஷ்யர்களின் மனதில் எழும் ஆழமான ஸந்தேகங்களை வேரறுத்து ஞானத்தை அருளுபவரும், தம்மை அண்டிச் சரணடையும் பக்தர்களைப் பீடித்துள்ள ஸம்ஸாரத் துயரங்களை என்றென்றும் அறுத்து

எறிபவருமான ஸ்ரீ ஸத்ய சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

**(रम्) रम्यं शान्तमुखाम्भोजं दिव्यतेजोविराजितम् ।**
**रञ्जनं भक्तनेत्राणां सत्यश्रीचन्द्रशेखरम् ।। ८ ।।**

காண்போரை ஈர்க்கும் அதி அற்புதமானதும், மாபெரும் அமைதி குடி கொண்டதுமான அரவிந்தம் (தாமரை) போன்ற திருமுக மண்டலத்தைக் கொண்டவரும், அத் திருமுகத்தில் திவ்யமான தேஜஸ் வீசப் பெற்றவரும், தரிசிக்கும் பக்தர்களின் கண்களுக்குப் பேரானந்தத்தையும் (நேத்ரோத்ஸவம்), நெஞ்சிற்கு முழுமையான நிறைவையும் வாரி வழங்கும் ஸ்ரீ ஸத்ய சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

**।। इति श्रीकाञ्चीकामकोटीश्वरकृपापात्रेण मध्यार्जुनक्षेत्रवासिना निधीश्वर श्रौतिना विरचितं श्रीजगद्गुरु– सत्यचन्द्रशेखरेन्द्र – सरस्वत्यष्टकम् ।।**




।। श्रीः ।।

# ।। श्रीकामकोटिप्रदीपः ।।
# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்



ஸ்ரீ ஆதி சங்கர பரம்பராகத ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடம்
ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடன்,
ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தால் வெளியிடப்படும் மாதாந்திர பத்திரிக்கை



SRI KAMAKOTI KOSASTHANAM
SCAN & PAY

## சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் - ரூ.220/- | மூன்று வருடம் - ரூ. 600/- |
| ஐந்து வருடம் - ரூ. 1000/- | ஆயுள் சந்தா - ரூ. 5000/- |

UPI ID : 6005671674skk@indianbk

சந்தாவினை புதுப்பிப்பவர்கள் மற்றும் புது சந்தாவிற்கு QR code மூலம் பணம் செலுத்தி, பெயர், விலாசம், கைப்பேசி எண் மற்றும் சந்தா தொகை வங்கி பரிமாற்ற விபரத்துடன் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்கிறோம். kamakotipradeepam@gmail.com அல்லது + 91 90038 45456 (WhatsApp)

ஓம் தந்வந்தரயே நம:

# 6. ஆயுர்வேதமும் - ஸுபாஷிதமும்

## தொடர்பு

டாக்டர். சுபாலா



**ஆயுர்வேதத்தில் தினச்சரியா (Dinacharya) மற்றும் ஆயுர்வேதக் கோட்பாடு**

ஆயுர்வேதத்தில் ''தினச்சரியா'' என்பது தினமும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறைகளைக் குறிக்கிறது. உடல், மனம் மற்றும் ஆத்மாவின் சமநிலையைப் பாதுகாக்கும் வாழ்க்கை முறையே தினச்சரியா. இதில் முக்கியமானவை:

தந்த தாவனம் (பல் துலக்குதல்)

ஸ்நானம் (குளியல்)

வ்யாயாமம் (உடற்பயிற்சி)

இவை குறித்து ஆயுர்வேதமும் சுபாஷிதங்களும் கூறும் கருத்துகள் பின்வருமாறு.

**1. தந்த தாவனம் (Danta Dhavanam – பல் துலக்குதல்)**

ஆயுர்வேதத்தில் அதிகாலையில் எழுந்தவுடன் பல் துலக்குவது முதன்மையான தினச்சரியா ஆகும். வேம்பு, இலுப்பு, கருவேலம் போன்ற கசப்பு மற்றும் துவர்ப்பு சுவையுடைய குச்சிகளைப் பயன்படுத்தச் சொல்லப்படுகிறது.

சுபாஷிதம்

**''दन्तधावनं कुर्यात् प्रातःकाले विशेषतः''**

**அர்த்தம்:**

அதிகாலையில் பல் துலக்குதல் அவசியம் செய்யப்பட வேண்டும்.

**பயன்கள்**

வாய்துர்நாற்றம் நீங்கும், பற்கள் பலப்படும், ஜீரண சக்தி மேம்படும், கப தோஷம் குறையும்.

**ஆயுர்வேதக் கருத்து**

நாக்கு மற்றும் வாயில் இரவில் தேங்கும் கழிவுகளை நீக்குவதால் உடல்நலம் பாதுகாக்கப்படுகிறது.

**2. ஸ்நானம் (Snanam – குளியல்)**

ஆயுர்வேதத்தில் ஸ்நானம் உடலைச் சுத்தப்படுத்துவதோடு மன அமைதியையும் தருகிறது.

**சுபாஷிதம்**

**''स्नानं शौचकरं नृणां पवित्रं पापनाशनम्''**

**அர்த்தம்:**

ஸ்நானம் மனிதருக்கு தூய்மையையும் புனிதத்தையும் அளிக்கிறது.

**பயன்கள்**

உடல் சோர்வு நீங்கும், தோல் சுத்தம் பெறும், புத்துணர்ச்சி கிடைக்கும். ரத்த ஓட்டம் சீராகும்.

**ஆயுர்வேத விதி**

வெதுவெதுப்பான நீரில் உடலைக் குளிக்கலாம்.

தலைக்கு மிக அதிக சூடான நீர் பயன்படுத்தக் கூடாது.

உணவுக்குப் பிறகு உடனே குளிக்கக் கூடாது.

**3. வ்யாயாமம் (Vyayamam – உடற்பயிற்சி)**

உடலுக்கு வலிமை தரும் முக்கிய தினச்சரியா வ்யாயாமம் ஆகும்.

**சுபாஷிதம்**

**व्यायामातब लभते स्वास्थ्यं दीर्घायुष्यं बलं सुखम्''**

**அர்த்தம்:**

உடற்பயிற்சியால் ஆரோக்கியம், நீண்ட ஆயுள், பலம் மற்றும் சந்தோஷம் கிடைக்கின்றன.

**பயன்கள்**

உடல் எடை கட்டுப்படும், ஜீரண சக்தி உயரும். தசைகள் பலப்படும் சோம்பல் நீங்கும் என்பது ஆயுர்வேதக் கருத்து.

அளவான உடற்பயிற்சி மட்டுமே செய்ய வேண்டும். அதிகப்படியான பயிற்சி வாதத்தை அதிகரிக்கலாம்.

**தந்த தாவனம் பற்றி விரிவாகக் காணலாம் (Danta Dhavanam)**

**அறிமுகம்**

''தந்த தாவனம்'' என்பது பற்களைச் சுத்தம் செய்வது அல்லது பல் துலக்குதல் ஆகும். ஆயுர்வேத தினச்சரியாவில் (தினசரி ஒழுக்க முறையில்) இது மிகவும் முக்கியமான இடம் பெறுகிறது. அதிகாலையில் எழுந்தவுடன் முதலில் செய்ய வேண்டிய செயல்களில் ஒன்றாக தந்த தாவனம் குறிப்பிடப்படுகிறது.

ஆயுர்வேதம் பற்கள் உடலின் ஆரோக்கியத்திற்கும் ஜீரண சக்திக்கும் முக்கியமானவை எனக் கூறுகிறது. வாயின் தூய்மை

உடலின் தூய்மைக்கான அடிப்படையாக கருதப்படுகிறது.

தந்த தாவனத்தின் வரையறை

''दन्तानां धावनं दन्तधावनम्''

**அர்த்தம்:**

பற்களைச் சுத்தம் செய்வதே தந்த தாவனம்.

**ஆயுர்வேதத்தில் தந்த தாவனத்தின் முக்கியத்துவம் :-**

ஆயுர்வேதத்தின்படி இரவு நேரத்தில் வாயில் கபம் மற்றும் அழுக்கு சேரும். அதனை நீக்க அதிகாலையில் பல் துலக்க வேண்டும்.

**இதனால் கிடைக்கும் நன்மைகள்:-**

வாய்துர்நாற்றம் நீங்கும், பற்கள் உறுதியாகும், ஈறுகள் பலப்படும், நாக்கு சுத்தமாகும், உணவின் சுவை நன்றாக உணரப்படும், ஜீரண சக்தி அதிகரிக்கும், கப தோஷம் குறையும்,

**தந்த தாவனம் செய்ய வேண்டிய நேரம்**

ஆயுர்வேதம் பிரம்ம முகூர்த்தத்தில் (சூரிய உதயத்திற்கு முன்) எழுந்து பல் துலக்க வேண்டும் எனக் கூறுகிறது.

சுபாஷிதம்

'प्रातःकाले दन्तधावनमब आरोग्यकरम्'

**அர்த்தம்:**

அதிகாலையில் பல் துலக்குதல் ஆரோக்கியத்தைத் தரும்.

**தந்த தாவனத்திற்கு பயன்படுத்தப்படும் குச்சிகள்**

ஆயுர்வேதத்தில் மரக்குச்சிகளைப் பயன்படுத்துவது சிறந்ததாகக் கருதப்படுகிறது.

**பயன்படுத்தப்படும் மரங்கள்**

வேம்பு, கருவேலம், இலுப்பு, அரக்கு, மா, நாவல்.

இவை பொதுவாக:

கசப்பு, துவர்ப்பு, கார்ப்பு சுவையுடையதாக இருக்கும்.

குச்சியின் தன்மைகள்: ஆயுர்வேத நூல்களின் படி:

சுமார் 12 அங்குல நீளம், சிறுவிரல் தடிமன், மென்மையான முனை புதியதாக இருக்க வேண்டும்.

குச்சியின் ஒரு முனையை மென்று தூரிகை போல மாற்றி பற்களைத் துலக்க வேண்டும்.

(தொடரும்)

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*॥ ஓம் தபோமக்னாய வேதாந்தபாஸ்கராய நம: ॥*

**தபஸா ப்ரஹ்மசர்யேண ச்ரத்தயா குருஸேவயா ।**

**லபதே ப்ரஹ்மவிஜ்ஞானம் தீரோ வேதாந்தபாஸ்கர: ॥**

தீரனாகிய சாதகன் தவத்திலிருந்தும், பிரம்மச்சர்யத்திலிருந்தும், சிரத்தையினாலும் சத்குரு சேவையினாலும் ஞானத்தை அடைகிறான்.

## 52. பிரம்மசர்யத்தினால் ஞானப் பிராப்தி

**பிராப்தி தான் ஹ ஸ ருஷிருவாச பூய ஏவ தபஸா ப்ரஹ்ம-**

**சர்யேண சரத்தயா ஸம்வத்ஸரம் ஸம்வத்ஸ்யத ।**

**ப்ரச்னோபநிஷத் 1-2**

*அந்த ஸுகேச, பாரத்வாஜர் முதலிய ஜிஜ்ஞாஸுகளிடம், பிரம்ம வித்யாசார்யனாகிய பிப்பலாத மகரிஷி தபஸுடனும் பிரம்மச் சர்யத்துடனும் மற்றும் ச்ரத்தையுடனும் ஒரு வருடகாலம் இருங்கள் என்று உத்தரவிட்டார்.*

பிரம்ம வித்யைக்காக தன்னிடம் வரக் கூடிய சிஷ்யர்களுக்கு எல்லாம் பிரம்ம வித்யையை குருவானவர் உபதேசம் செய்யக் கூடாது. முதலில் அந்த சிஷ்யனுடைய யோக்யதையைப் பரிக்ஷித்து, பிறகு உபதேசம் செய்ய வேண்டும். சித்த சுத்தி இல்லா விட்டால் பிரம்ம வித்யை அனுபவத்திற்கு வராது.

பிரம்ம வித்யையை விரும்பக் கூடிய சாதகன் தவத்தையும் பிரம்மச்சர்யத்தையும் அனுஷ்டானம் செய்ய வேண்டும். தவம் என்றால் இந்திரிய நிக்ரகம், சத்திய வசனம், அஹிம்ஸை, ஜபம் முதலியவை. சத்குரு சேவையை செய்து கொண்டு, அவரிடமிருந்து பிரம்ம வித்யையைக் கேட்க வேண்டும். அத்தகைய சிஷ்யனுக்கு குருபக்தி இல்லா விட்டால் ஞான ப்ராப்தி ஆகாது. பிரம்மச்சர்யமும், குருபக்தியும் சிஷ்யனுக்கு முக்கியமான சாதனைகளாகும்.

*॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥*

# வேத ஸூக்தங்கள்

## ஜைமினி

**புண்யாஹ மந்த்ரங்கள் தொடர்ச்சி**

*புண்யத்தைக் கொடுக்கும் மந்த்ரங்கள் இவை. நாமிருக்குமிடம் காற்று, ஜலம், ஆகாசம், என்று பஞ்ச பூதங்களையும் தூய்மைப்படுத்தும் மந்தரங்கள். இவை இல்லாமல் எந்த வைதீக கார்யமுமில்லை. எந்த தீட்டு போனாலும் இவை ஓதப்ப்டுகின்றன. தேவர்களின் ஆசீர்வாதம் கோரப்படுகிறது. புண்யாஹம் என்னும் இவை புண்யாவசனம் என்று கூறப்படுகின்றன. இவையே புண்யாஞ்சனம் என்றும் புண்யா ஜலமென்றும் தவறாகக் கூறப்படுகின்றன. அவ்வாறு கூறுவதைத் தவிர்ப்போம். பொருளைப் பார்ப்போம்.*

**ஆபஸ்தம்பப் ப்ரயோகத்தை ஒட்டி உரை எழுதப்படுகிறது.**

1. கர்மங்களில் தூண்டுவிக்கும் அக்னி தேவனே ! முழு மனத்துடன் என்னை அனுக்ரஹித்துப் புனிதமாக்கவும், மகத்தானதும் வெகு காலமாய் வளர்ந்துதுமான பாவன சக்தியால் என்னைப் புனிதமாக்கவும்.

2. எதனால் தேவர்கள் முன்னோர்களைப் புனிதமாக்கினரோ, எதனால் ஜலதேவதைகள் தேவ லோக மார்க்கத்தைப் புனிதமாக்கினரோ, அந்த திவ்ய சக்தியினால் இந்த சிறந்த கர்மாவைப் புனிதமாக்குவோம்.

3. எவன் பவமான மந்த்ரங்களை அத்யயனம் செய்கிறானோ, அவன் ரிஷிகளால் சேமித்து வைக்கப்பட்டதும், வாயு பகவானால் சுவை கூட்டப்பட்டதுமான அமிழ்தம் அனைத்தையும் அருந்துபவன் ஆவான்.

4. எவன் பவமான மந்த்ரங்களை ஜபிக்கிறானோ, அவனுக்கு ரிஷிகளால் ஸேமித்து வைக்கப்பட்ட அமிழ்தத்தை ஸரஸ்வதி தேவி அளிக்கிறாள். பாலும், நெய்யும், நீரும், தேனும் அவனுக்கு அமிழ்தமாய் இருக்க அருள்கிறாள்.

5. பவமான மந்த்ரங்கள் ரிஷிகளால் அருளப்பட்டவை. உயர் நலனைத் தருபவை. காமதேனு போன்று எதையும் தருபவை.

6. இந்த பவமான மந்த்ர தேவதைகள் நமக்கு இகபரமான இரு உலகங்களையும் அளித்து அங்கு விருப்பங்களை எல்லாம் பூர்ணமாக அருள வேண்டும்.

7. பவமான மந்த்ரங்கள் சுகம் தருபவை. நெய் போல் புஷ்டியையும், பரிசுத்ததையும் தருபவை. இவை ரிஷிகளால் அருளப்பட்டவை.

8. எந்த பவமான மந்த்ரங்களால் தேவர்கள் தங்களைப் புனிதமாக்கிக் கொள்கிறார்களோ அந்த மந்த்ரங்கள் ஆயிரம் தாரைகளால் என்னைப் புனிதமாக்கட்டும்.

9. ப்ராஜாபத்ய கர்மாவால் பவமான மந்த்ரங்களால் நாம் (வேதியர்கள்) இந்த கர்மாவை மேலும் புனிதமாக்குவோம்.

10. இந்த்ரன் ஸுனீதி தேவியுடனும், ஸோமன் ஸ்வஸ்தி தேவியுடனும், வருணன் ஸமீசி தேவியுடனும், யமதர்ம ராஜா ம்ருத்யு தேவதைகளுடனும் என்னைப் புனிதமாக்கட்டும். ஜாத வேதன் ஊர்ஜயந்தி தேவதையுடன் என்னைப் புனிதமாக்கட்டும்.

11. அந்த பெரும் சாந்தியை ஆவரணம் செய்கின்றோம். வேள்வியின் நன்மைக்காகவும், வேள்வி செய்வோர்களின் நன்மைக்காகவும் அந்த பெரும் சக்தியை ஆவரணம் செய்கிறோம். நம் அனைவருக்கும் தெய்வ அருள் உண்டாகுக. மனித குலம் அனைத்துக்கும் ஸ்வஸ்தி உண்டாகுக. ஓஷதிகள் வளர்க, இருகால் ப்ராணிகளுக்கு நன்மை உண்டாகுக. நாற்கால் ப்ராணிகளுக்கு நன்மை உண்டாகுக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி:

பகவத்கீதா கங்காஜல லவ கணிகா பீதா
ஸக்ருதபி யேன முராரி ஸமர்ச்சா க்ரியதே தஸ்ய யமேன ந சர்ச்சா :

எவனால் பகவத் கீதை கொஞ்சமேனும் அத்யயனம் செய்யப்பட்டுள்ளதோ கங்கை ஜலம் ஒரு துளி பானம் செய்யப்பட்டுள்ளதோ முரனை சம்ஹரித்த க்ருஷ்ணனை ஒரு தடவையாவது ஆராதனம் செய்யப்பட்டுள்ளதோ அவனுக்கு யமனோடு தகராறு இல்லை.

ஸ்ரீ சங்கரரின் மோஹ முத்கரம்

# சுக்ர நீதி

*சுக்ர நீதி வட மொழியில் உள்ள நூல். மனு ஸ்ம்ருதிக்குப் பிறகு பெரிதும் மதிக்கப்படும் நூல். சுமார் 10ஆம் நூற்றாண்டில் இது எழுதப்பட்டு இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பு. அரச தர்மத்தையே பெரும்பாலும் பேசினாலும் பொதுவான தர்மங்களையும் இது கூறும். பரந்த மனப்பான்மையுடன் இது எழுதப்பட்டு உள்ளது என்றால் மிகையாகாது. மொத்தம் ஐந்து அத்யாயங்களைக் கொண்டது.*

**மூன்றாம் அத்யாயத்தில் பொதுவான தர்மங்களை விரிவாகக் கூறும். ஸ்ரீ பண்டிதமணி கதிரேசன் செட்டியார் இதை வட மொழியிலிருந்து மிகச் சிறப்பாக மொழி பெயர்த்து உள்ளார். அதை ஒட்டியே நாமும் தருகிறோம்.**

இரவில் முதல் யாமத்தையும், கடை யாமத்தையும் தவிர்த்து நடுவில் உள்ள இரண்டு யாமங்களிலும் தூங்குவது சிறந்தது.

வறியவரையும், குருடரையும், முடவரையும், செவிடரையும், ஒரு பொழுதும் எள்ளி நகையாடல் செய்யக் கூடாது.

செய்யத் தகாத கார்யத்தில் அறிவை செலுத்தல் கூடாது. ஒரு கார்யத்தை நிறைவேற்றுவதில் கவனம் உள்ளவன் தன் பெருமையை விட்டு விட்டு முயற்சி, அறிவு, வலிமை, அஞ்சாமை, பராக்ரமம், நேர்மை இவைகளால் சுறுசுறுப்போடு கார்யத்தை முடிக்க வேண்டும்.

எவன் இடத்திலும் வருத்தம் விளைவிக்கும் சொற்களைக் கூறக் கூடாது. எவரிடத்திலும் குற்றம் காணக் கூடாது. ஒரு பொழுதும் பெரியோர்கள் உடையவும், அரசன் உடையவுமாகிய ஆணைகளை மீறக்கூடாது.

இழிந்த கார்யத்தில் ஏவுவோன் குருவாயினும், அது தீது என்று அறிவுரை கூறலாம். நல்ல கார்யத்தை அறிவிப்போன் தாழ்ந்தோனாயினும் அதைச் செய்யலாம். இளம் பருவத்திலுள்ள தன் மனைவியைக் காக்க வேண்டும். அதி சுதந்திரம் அளிக்கக் கூடாது.

மதத்தை விளைவிக்கும் பொருள்களில் களிப்பதும், கெட்ட புதல்வனிடத்தில் அபிமானம் கொண்டு வாழ்வதும் கூடாது.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

ஸுந்தரமூர்த்தி ஐயர்
வாலாஜா



எனக்கு எட்டு வயது அப்போது. வட ஆற்காடு ஜில்லா துத்திகாடு என்ற க்ராமத்தில் வசித்து வந்தோம். எங்கள் இல்லத்தில் நடந்த பிக்ஷா வந்தனத்தில் பெரியவாளின் முதல் தரிசனம். பல பசுக்கள், இரண்டு யானைகள், குதிரைகள் நிறைய வண்டிகள் முதலிய பரிவாரத்துடன் வந்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து பல தரிசனங்கள்.

பெரிய காஞ்சீபுரத்தில் மத்யானம் ஒரு கோபுர வாசலில் பெரியவா அமர்ந்திருந்தார். தர்சனத்திற்குப் பல பேர் வந்திருந்தனர். அப்போது ஸ்ரீ சரணருக்குப் பார்வை குறைவு என்று எண்ணி இங்கே படி இங்கே பள்ளம் என்று வேதபுரி வழிகாட்டியவாறு முன்னே செல்வார். அன்று அவர்களிடம் மூக்குக் குத்திக் கொண்டு ஒருவர் வந்தார்.

அவரைக் கூப்பிடு என்று வேதபுரியிடம் கூறினர்கள். நாங்கள் தேடினோம் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர் பெரியவா பக்கத்திலேயே நின்று கொண்டிருந்ததை பின்பு கண்டோம்.

ஸ்ரீ பெரியவா அவரிடம் ‘உங்களுக்கு மூக்குத்தி குப்புசாமி’ என்று தானே பெயர்? என்றார். நான் வியப்படைந்தேன். ஸ்ரீ பெரியவாளுக்குப் பார்வை குறைவு என்கிறார்களே என்று அது வியப்பாக இருந்தது.

கார்வேட் நகரில் பெரியவாளின் முகாம். பல பேர் தர்சனத்திற்கு வந்திருந்தனர். ஒவ்வொருவராக தர்சனம் செய்து போய் விட்டனர். பூஜ்யஸ்ரீ பெரியவா இன்னும் யாரேனும் வெளியில் இருக்கிறார்களா என்று பார்த்து வரச் சொன்னார்கள்.

சற்று தூரத்தில் ஒரு பெண்மணி நின்று கொண்டிருந்தாள். அவளைத் தர்சனத்திற்கு வரச் சொன்னோம். அதற்கு எனக்குத் தகுதி இல்லை என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போது பெரியவாளே வெளியில் வந்து அவளுக்குத் தர்சனம் தந்து அருளினார்கள். அந்தப் பெண் ஒரு தேவதாசி. மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தாள். பெரியவா அவளுடைய பையனுக்கு வேலைக்கு ஏற்பாடு செய்யும்படி ஆணையிட்டார்கள். பெரியவாளின் காருண்ய வீச்சு மிகப் பெரியது.




ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்,
நெ. 1, சாலைத்தெரு, காஞ்சிபுரம்- 631 502.
web : www.kamakoti.org Email : kanchiacct@gmail.com

☎ : 044-27222115
Cell : 9445421115



**கைங்கர்யங்கள்**

| ஸம்வத்வர சேவா கைங்கர்யங்கள் | ஒருமுறை | ஒரு வருடம் | நிரந்தர வைப்பு |
|---|---|---|---|
| அனுஷ பூஜை (ப்ரதி மாதம் அனுஷத்தன்று) | 1,000 | 15,000 | 2,00,000 |
| அவிட்டம் பூஜை ( ப்ரதி மாதம் அவிட்டத்தன்று) | 1,000 | 15,000 | 2,00,000 |
| ப்ரதோஷ பூஜை | | 1,000 | 10,000 |
| பௌர்ணமி பூஜை | | 500 | 5,000 |
| **மற்ற சேவா கைங்கர்யங்கள்** | | **ஒருமுறை** | **நிரந்தர வைப்பு** |
| நித்ய வேத பாராயணம் | | 5,000 | 50,000 |
| நித்ய அன்னதானம் | | 5,000 | 50,000 |
| கோ சம்ரக்ஷணம் | | 5,000 | 1,00,000 |
| வேத பாடசாலை | | 5,000 | 50,000 |
| அகண்ட நெய் தீப சேவை | | 5,000 | 1,00,000 |

Online Transfer Details for doing Contribution towards above mentioned Pooja Kainkaryams
Account Name : **SRI K.K.P.SANKARACHARYA SWAMIGAL SRIMATAM SAMSTHANAM**
BANK NAME & BRANCH : **Indian Bank, Sankara Mutt Branch, Kanchipuram**
SB A/C No : **411550436** IFS Code : **IDIB000S085**

Kindly Intimate your contribution details Viz: Name, Address, Mobile Number, E-Mail ID, Amount Transferred, Seva Name (for which you are contributing), Transaction Reference No/UTR No. to : **kanchiacct@gmail.com** to enable us to send you receipt and prasadam.

**Online Contribution can be made through E-Seva Portal - www.kanchimuttseva.org**

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 31. உயிர் வாழும் போதே செய்ய வேண்டும்

எண்பத்தி நாலு லக்ஷம் வகையான ஜீவராசிகளில் மனிதனே மிகவும் அதிர்ஷ்டசாலி. சக்தியும், புத்தியும், நிறைந்தவனாக இருக்கிறான். இந்த ஆறடி மனிதன் வானத்தையும் பூமியையும் ஒன்றாக்கும் வல்லமை பெற்றுள்ளான். பஞ்ச பூதங்களையும் வென்று தன் வசப்படுத்திக் கொள்ளும் திறமை உள்ளவன். கப்பலின் உதவியால் மகா சமுத்திரங்களையே எளிதில் தாண்டி விடுகிறான். ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் உள்ள நாடுகளுக்கு விமானம் மூலம் பறந்து செல்கிறான்.

மனிதன், தன் புத்தி சாமர்த்தியத்தினாலும், அதிகார சக்தியினாலும் உலகையே மாற்றி அமைக்கிறான். வேத சாஸ்த்திரங்களை அத்யயனம் செய்தும், யஜ்ஞம், யாகம், ஜபம், பூஜை, தவம், போன்றவற்றினாலும் வேறு லோகங்களையும் அடைய முடியும். தேவாதி தேவர்களையும் தன் சுவாதீனத்திற்குள் கொண்டுவர முடியும். தான தர்மங்களைச் செய்து அதன் மூலம் நலிந்தவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரலாம். மனம் வைத்தால் மனிதன் சொர்க்க லோகத்தையே பூமிக்குக் கொண்டு வரலாம். மனிதனால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. ஏன் என்றால் சர்வ வல்லமை உடைய இறைவனின் புத்திரன் தானே இந்த மனிதன்.

நினைவு இருக்கட்டும் ! இவ்வளவையும் மனிதன் உயிர் வாழும் போது தான் செய்ய முடியும். இறந்த பின் இவன் உடல் நெருப்புக்கு அர்ப்பணமாகி விடுகிறது. இவன் சரீரத்திற்கு ஏது விலை ? இந்த உடம்பை யாரும் வீட்டில் பாதுகாப்பது இல்லை. ஆனால், ஒரு கோழியோ, ஆடோ, மாடோ இறந்த பின்னரும் அதற்கு விலை உள்ளது. யானை, புலி போன்ற விலங்கிற்கும் அதன் தந்தம், தோல் ஆகியவற்றிற்கும் மதிப்பு இருக்கின்றன. ஆனால் மனிதன் இறந்த பின், அவனது உடல் யாருக்கும் தேவையில்லை.

அதனால் நாம் உயிர்வாழும் போதே தானம், தர்மம், பரோபகாரங்களைச் செய்ய வேண்டும். தெய்வ பக்தியினால் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். உயிர் வாழும் போதே உலகிற்கு நன்மை செய்து பவித்ரமான மனிதப் பிறவியைப் பயன்படுத்திக் கொள்ளுவோம்.

# கண்டாகர்ணன்

(கண்டாகர்ணக்ருதா விஷ்ணுஸ்தவப்ரார்தநா தஸ்ய ஸமாதிலாபம்)

*பகுதியின் சுருக்கம்:*
*பிசாசுகளிடம் பேசிய கிருஷ்ணன்; வரலாற்றைச் சொன்ன பிசாசு; கண்டாகர்ணனின் விஷ்ணு ஸ்தவப் ப்ரார்த்தனை...*

நான் கண்டாகர்ணன் என்ற பெயருடைய பிசாசு ஆவேன். என்னைப் பார்ப்பதே மங்களமற்ற நிலையைக் கொடுக்கும். நான் சிதைந்த முகத்துடன் கூடியவனாகவும், மாமிசம் உண்பவனாகவும் இருக்கிறேன். எனவே இரண்டாம் மிருத்யுவைப் போலக் காணப் பயங்கரனாக இருக்கிறேன். நான் ருத்ரனின் அன்புக்குரிய நண்பரான தனஸ்யரின் (குபேரனின்) தொண்டன் ஆவேன். அந்தகனைப் போலத் தெரியும் இவன் என் தம்பி ஆவான். நாங்கள் விஷ்ணுவை வழிபடும் நோக்கத்துடன் வேட்டையாடிய படியே இங்கே வந்தோம். இந்தப் படை என்னுடையதே, இந்த நாய்களும் என்னுடையவையே. மஹா சைலமும், பல பூதங்களால் தொண்டாற்றப்படுவதுமான கைலாச மலையில் இருந்து நான் இங்கே வந்தேன். நான் பிசாசு உடலுக்குள் இருக்கும் பெரும்பாவி ஆவேன்.(26)

*மஹாபாரதம் சல்லிய பர்வம் 48:24ல் ஸ்கந்தனின் துணைவர்களாக நந்திசேனன், லோஹிதாக்ஷன், கண்டாகர்ணன், குமுதமாலி என்று நான்கு பேர் சொல்லப்படுகின்றனர். மஹாபாரதத்தில் கண்டாகர்ணன் கந்தனின் தொண்டனாகவும், ஹரி வம்சத்தில் அவனே குபேரனின் தொண்டனாகவும் சொல்லப்படுகிறான். அல்லது அங்கே சொல்லப்பட்டவனும், இங்கே சொல்லப்பட்டவனும் வெவ்வேறான வர்களாகவும் இருக்கலாம்.*

முற்காலத்தில் விஷ்ணுவை அவதூறு செய்யும் வழக்கத்தை நான் கொண்டிருந்தேன். உண்மையில் விஷ்ணுவின் புனிதப் பெயர் காதுகளில் நுழைந்து விடாதபடிக்கு பெரிய மணிகளை (கண்டங்களை) என் காதுகளில் கர்ணங்களில் அணிந்திருந்தேன். இதில் நான் எவ்வளவு தீவிரமாக இருந்தேன் என்பதை இதன் மூலம் நீ அறிந்து கொள்ளலாம்.

ஒரு நாள் நான் கைலாச மலைக்குச் சென்று ரிஷபத்வஜனான சிவனை வழிபட்டேன். அப்போதிலிருந்து அந்த மஹாதேவனை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். என்னுடைய வழிபாட்டில் நிறைவடைந்த ஹரன், சிவன்,

என்னிடம், 'நீ ஒரு வரத்தை என்னிடம் கேட்பாயாக' என்றான். நான் அவனிடம் முக்தியை வேண்டினேன்.

என் வேண்டுகோளைக் கேட்ட அந்தத் திரிலோசனன் (முக்கண்ணன் சிவன்), உயிரினங்கள் அனைத்திற்கும் முக்தியை அளிக்க வல்லவன் விஷ்ணுவே என்பதில் ஐயமில்லை. எனவே நீ பத்ரி காசிரமத்திற்குச் செல்வாயாக. நரநாராயண ரிஷிகளின் ஆசிரமத்தில் கோவிந்தன் என்று அறியப்படும் அந்த ஜனார்த்தனனை நீ வழிபட்டால், நிச்சயம் அவன் உனக்கு முக்தியை அளிப்பான் என்றான்.

சூலதாரியான அந்தத் தேவதேவன் (சிவன்) இவ்வாறு சொன்னதும், கருடத்வஜனான கோவிந்தனின் பரம மகிமையை நான் அறிந்து கொண்டேன். அவனிடம் முக்தியை வேண்டும் விருப்பத்திலேயே நான் இங்கே வந்திருக்கிறேன். உனக்கு விருப்பமிருந்தால் என் கதையைத் தொடர்கிறேன் கேட்பாயாக.

யது விருஷ்ணி குலங்களைச் சேர்ந்தவர்கள் வசிக்கும் மேற்குக் கடற்கரையில் துவாராவதி என்ற புகழ்பெற்ற நகரம் இருக்கிறது. அந்த நகரம் அனைத்துப் பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருக்கிறது. தற்போது ஹரி அங்கேயே வசித்து வருகிறான். ஓ! தலைவா, உலகின் நன்மைக்காகத் துவாரகையில் வசித்து வருபவனும், ஹரியும், விஷ்ணுவுமான அந்தப் புருஷோத்தமனைச் சந்திக்கவே எங்கள் தொண்டர்களுடன் நாங்கள் வந்திருக்கிறோம். உயிரினங்கள் அனைத்தின் தலைவனான (சர்வேஸ்வரனான) விஷ்ணுவை இன்று முகத்திற்கு நேராகச் சந்திப்போம் என நாங்கள் நம்புகிறோம். அனைத்தும் வெளிப்பட்டதன் உண்மைக் காரணன் அந்த ஹரியே. அண்டத்தைப் படைத்தவனும், காப்பவனும், அழிப்பவனுமான அவனே அனைத்தையும் கட்டுப்படுத்துகிறான். ஜகத்பதியான அவனே உண்மையில் உயர்ந்த தேவனாவான்.

மொத்த அண்டத்தின் உரிமையாளனும், ஆதி தேவனும், புராதனனும், தூய நல்லியல்பின் வடிவமும், வரங்களை அருள்பவனும், வழிபடத் தகுந்தவனுமான அந்த ஹரியை தரிசிக்கும் நம்பிக்கையுடனே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். எவனுடைய அருளால் பல்வேறு உயிரினங்களும், கந்தர்வர்களும், பாம்புகளும் வசித்திருக்கும் இவ்வுலகம் இருப்புக்குள் வந்ததோ அந்த ஜனார்த்தனனைக் காணவே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். படைப்பின் உண்மைக் காரணனாக இருப்பினும் அவன் காரணம் ஏதும் இல்லாதவன் ஆகவும், பிறப்பற்றவன் ஆகவும் இருக்கிறான்.

(தொடரும்)

## *தாயுமான ஸ்வாமிகள் அருளிய*
## *தக்ஷிணாமூர்த்தி துதி:-*

*அங்கையொடு மலர்தூவி அங்கமது புள்கிப்ப*
*அன்பினால் உருகி விழி நீர்*
*ஆராக ஆராத முத்தியினதாவேச ஆசைக்*
*கடற்குள் மூழ்கி*
*சங்கர! சுயம்புவே! சம்புவே! எனவு மொழி*
*தழுதழுத்திட வணங்கும்*
*சன்மார்க்க நெறியிலாத்*
*துன்மார்கனேனையும் தண்னருள்*
*கொடுத்தாள்வையோ*
*துங்கமிகு பக்குவ சனகன் முதன்*
*முனிவோர்கள் தொழுதருகில் வீற்றிருப்ப*
*சொல்லரிய நெறியையொரு சொல்லால்*
*உணர்த்தியே சொருபானந்தபூதி காட்டி*
*செங்கமல பீடமேல் கல்லாலடிக்குள் வளர் சித்தாந்த முத்தி முதலே*
*சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே சின்மயானந்த குருவே*



*பொருள் :- மிகவும் பக்வத்தை உடைய சனகர் முதலான முனிவர்கள் வணங்கி அருகில் வீற்றிருப்ப அருமையான நெறியை ஒரு சொல்லால் உணர்த்தி அனுபூதியைக் காட்டி தாமரை இருக்கை மீது கல்லால மரத்தின் கீழ் இருக்கும் திருச்சிராப்பள்ளியில் விளங்கும் தக்ஷிணாமூர்த்தியே !*

*நல்ல மலர்கள் கொண்டு திருவடியில் தூவி உடல் புளகாங்கிதம் பெற பக்தியினால் உள்ளம் உருகி விழியிலிருது நீர் பெருக, மோக்ஷத்தின் கடலுக்குள் மூழ்கிய சங்கரனே ! சுயம்புவே ! சம்புவே ! என்று வாயார வழ்த்தி சொல் தடுமாற வணங்கும் சித்தாந்த நன்னெறியில் நில்லாத புன் நெறியில் செல்லும் என்னையும் குளிர்ந்த கருணை தந்து ஆள்வாயோ !*